தமிழ்நாடு

# நுகர்விழி


மாத இதழ்

நுகர்வோரின் மூன்றாவது கண்!

www.tncpo.com

₹20 மலர் - 16 இதழ் - 04 ஏப்ரல் - 2022 TAMILNADU NUGARVIZHI

facebook TNCPO Chennai




## ஆன்லைன் வர்த்தகத்தில் அதிகரிக்கும் போலிப் பொருட்கள்!

## சொத்து வரி உயர்வு மக்களை மிகவும் பாதிக்கும்!

தமிழக அரசு திரும்ப பெற தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு வலியுறுத்தல்!




PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI

# தமிழ்நாடு நுகர்விழி மாத இதழின் வாசகர்களுக்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**Dr. D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட
நுகர்வோர் அமைப்பின் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநிலச் செயலாளர்
தமிழ்நாடு
99625 26601



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
99404 77815



**L.மயில்வாகனம்**
மாநில அமைப்புச் செயலாளர்
96001 29030



**A.விஜயகுமார்**
மாநில பொருளாளர்
80720 31115



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்,
திருப்பூர் மாவட்டத் தலைவர்
98431 88657



**J.செல்வம்**
மா. து. பொதுச் செயலாளர்
82200 82727



**M.சுரேஷ்குமார்**
தேசிய நிர்வாக ஆலோசகர்
மற்றும் மாநில இணை ஒருங்கிணைப்பாளர்
96772 79744



**T.S.K. கில்கிரிஸ்ட்**
தேசிய ஒருங்கிணைப்பாளர்
87544 44358



**M.பாலாஜி**
மாநில நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்
96001 11522



**M.பிரபாகர்**
மாநில இணைச் செயலாளர்
94443 31396



**M.ரமேஷ்குமார்**
மாநில இளைஞரணிச் செயலாளர்
98410 98983



**T.ராஜேஷ்**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
மற்றும் பெரும்பாக்கம் கிளைத் தலைவர்
74016 66677



**D. ரமேஷ்பாபு**
மாநில துணைச் செயலாளர்
93808 88883



**V. சுகிர்தயராஜ்**
மாநில துணைச் செயலாளர்
90443 90443

## பேரமைப்பின் மாநில நிர்வாகிகள்

ADVT

தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்!
மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

### அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

ஆசிரியர்

**தமிழ்நாடு நுகர்விழி**

எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993

இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு “தமிழ்நாடு நுகர்விழி” பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத் துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

## உள்ளே...

மாவட்ட காவல் கண்காணிப் பாளருக்கு புகார் அனுப்புவது எப்படி? — 6

பயனுள்ள அழகு குறிப்புகள் உங்களுக்காக ..!!! — 6

தெரிந்து கொள்ளுங்கள் இந்தியாவில் சைபர் கிரைம் சட்டம்! — 14

தமிழகத்தில் சொத்து வரி உயர்வு நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கும்! — 32

# நுகர்வோரின் உரிமையை உறுதி செய்வோம் !

உலக நுகர்வோர் தினத்தில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு நுகர்வோர்களுக்கு தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது...

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ஆனால் நுகர்வோருக்கு பில்லே ஆயுதம் தவறுகளைத் தட்டிக் கேட்டு சுட்டிக்காட்டி உரிய நிவாரணம் பெற நமக்கும் உரிமை உண்டு என்ற அடிப்படையில் சர்வதேச நுகர்வோர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான நுகர்வு கலாச்சாரம் உருவாகிக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மனிதரும் தங்களுக்கு தேவையான ஏதோ ஒன்றை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் ஒவ்வொரு மனிதரும் நுகர்வோரே. அதிலும் டிஜிட்டல் வாழ்க்கை என்ற பெயரில் செல்போனில் ஆர்டர் செய்து வாழ்க்கையை நடத்தும் தற்போதைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஏமாற்றப்படுகிறார்கள். அது, நம்முடைய அறியாமையால் ஏற்படுவது ஒருபுறம் இருந்தாலுஞ் மறுபுறம் போனுக்கு ரீ சார்ஜ் போடும் போது தொடங்கி பஸ் மற்றும் ரயில்களில் பயணிக்கும்போதும், திரையரங்குகள் என பல சந்தர்ப்பங்களில் தெரிந்தும் ஏமாறுகிறோம். அனைவரும் தமது உரிமையைக் காத்திடவும், ஏமாற்றத்தைத் தவிர்த்திடவும் எப்போதும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். இதற்காகத்தான் ஆண்டுதோறும் மார்ச் 15ம் நாள் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

20ஆம் நூற்றாண்டிலிருந்துதான் நுகர்வோரின் முக்கியத்துவம் கவனிக்கப்பட்டு வருகிறது. உலக நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் கணிப்பின்படி 21 ஆம் நூற்றாண்டில் நுகர்வோர் விழிப்புணர்வு இன்னும் அதிக தேவையாயிருக்கிறது. நாம் உபயோகிப்பதற்காக விலை கொடுத்து வாங்கும் ஒவ்வொரு பொருளும் அதன் உரிய பலனைத் தருகின்றதா? நாம் கொடுக்கும் விலைக்கு உரியதுதானா? நாம் ஏமாற்றப்பட்டுள்ளோமா என்பனவற்றை அறியும் உரிமை நமக்கு இருக்கிறது..

தரம் குறைந்த பொருட்களை நமக்குத் தந்து விட்டு, அதன் தயாரிப்பாளரோ கடைக்காரரோ நம்மை ஏமாற்றுவது சட்டப்படி குற்றம். அதற்காக அந்த பொருளை நம்மிடம் விற்பனை செய்தவர் மீது நாம் வழக்கு தொடர முடியும். அது போலவே பேங்குகளிலோ ஆஸ்பத்திரிகளிலோ, பஸ், ரெயில், டாக்ஸி, ஆட்டோ, அல்லது விமானம் போன்றவற்றிலோ நாம் பெறும் சேவைகளில் குறைபாடுகளோ குளறுபடிகளோ இருந்தால் அவையும் நம் உரிமையைப் பாதிக்கும் செயல்கள்தான் அதற்காகவும் நாம் வழக்கு தொடர முடியும். காசு கொடுத்து வாங்கும் பொருளில் தரம் குறைவு,சேவை குறைபாடுகளிருந்து சட்டப்படி நிவாரணம் பெறும் உரியையும்,கடமையும் நமக்கு உள்ளது..

* பாதுகாப்பு உரிமை, * தகவல் பெறுவது, * தேர்ந்தெடுக்கும் உரிமை, * உத்தரவாதம் பெறும் உரிமை, * நிவர்த்தி பெறும் உரிமை, * உரிமைகளை தெரிந்து கொள்ளும் உரிமை

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிலும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய சட்டங் களும் அதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டிருகின்றன. இந்த சட்டம் இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வாழும் மக்களின் நுகர்வுத் தன்மையை பதுகாக்கும் பொருட்டு இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். நுகர்வோர் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாகவும், அதன் செயற்பாடுகள், முக்கியத்துவங்கள் அதிகரிக்கப்பட்டு திருத்தச் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 2019 ம் ஆண்டு புதிய பரிமானங்களுடன் வெளியிடப்பட்டது

நாம் கடைகளுக்கு செல்கிறோம். உணவு பொருள்கள் வாங்குகிறோம். உடைகள் வாங்குகிறோம். விமானத்தில், ரயிலில், பேருந்தில் பயணிக்கிறோம். இப்படி எல்லாவிதமான நுகர்வுகளையும் நாம் மேற்கொள்கிறோம். ஆனால் அதற்குரிய ரசீதை மட்டும் சரியான முறையில் கவனித்து வாங்க மறந்துவிடுகிறோம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் நுகர்வோருக்கு பில்லே ஆயுதம் என்ற அடிப்படையில் நாம் வாங்கும் பொருளுக்கு கட்டாயமாக உரிய ரசீதைக் கேட்டு வாங்க வேண்டும். இதையெல்லாவற்றையும் மறந்துவிட்டு இணையத்திலேயே வாழ்கையை தொலைத்து கொண்டிருக்கிறோம். இணையவழியில் வாங்கும் பொருளுக்கு உரிய தரம் மற்றும் சேவை கிடைக்கவில்லை என்றாலும் நாம் நுகர்வோர் நீதிமன்றத்தில் உரிய முறையில் செய்து உரிய பரிகாரம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற புதிய சட்டத்திருத்தம் நமது தேசத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது எனவே பாதிக்கப்படும் நுகர்வோர் தயங்காமல் தவறை சுட்டிக்காட்டி நிவாரணம் பெற வழிமுறை காணப்பட்ட தினமே உலக நுகர்வோர் தினம் இந்த தினத்தை நாம் விழிப்புணர்வோடு வரவேற்போம்

இன்று சுத்தமான காற்றும் நீரும் நாம் கடையில் கேட்டு வாங்கி கொண்டிருக்கிறோம், அதில் எந்தளவு உண்மையிருக்கிறது என்பதை நாம் பரிசோதனை செய்திருக்கிறோமா? சாதாரணமாக அன்றாட தேவைகளுக்கே யாரோ ஒருவரை நம்பியிருக்கிற நாம் அதற்கான முக்கியத்துவம் குறித்து யோசிக்கக் கூட நேரமில்லை என்பது பெருமையான வார்த்தை இல்லை என்பதை உணர்த்தும் நாளே உலக நுகர்வோர் தினம் ஆகும்! குறைகளை சுட்டிக்காட்டி தட்டிக் கேட்க தயக்கம் ஏன் என்ற அடிப்படையில் நுகர்வோரின் உரிமையை உறுதி செய்வோம்.



டாக்டர்
**N.கண்ணையா**, Phd
முதன்மை ஆசிரியர்



**C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர்
மற்றும் வெளியீட்டாளர்

# நமது அடிப்படை உரிமை

**அரசியல் சட்டத்தின் 21வது பிரிவு என்ன சொல்கிறது?**

ஆதார் வழக்கில் அரசியல் சாசனச் சட்டத்தின் 21வது பிரிவின்படி தனி நபர் "பிரைவசி" என்பது அடிப்படை உரிமையே என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தீர்ப்பளித்துவிட்டது. எனவே அந்தரங்கத் தகவல்கள் அடங்கிய ஆதார் எண்ணை இனி கட்டாய மாக்க முடியாத நிலைக்கு மத்திய அரசு தள்ளப்பட்டுள்ளது.

அரசியல் சாசனச் சட்டத்தின் 21வது பிரிவில் அடிப்படை உரிமை குறித்து என்ன சொல்லப்பட்டுள்ளது?

தனி நபர் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பது இந்த சட்டப் பிரிவு. இந்த சட்டத்தின் மூலமாக எந்த ஒரு நபரின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது, கூடாது.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உள்ள




அவருக்குரிய அடிப்படை உரிமையை யாரும் பறிக்க முடியாது. வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரும் கூட இந்த சட்டத்தின் படி தனது அடிப்படை உரிமையை இங்கு நிலைநாட்ட முடியும். அதேசமயம், வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் நிரந்தரமாக தங்குவதை உரிமையாக கோருவதற்கு இந்த சட்டம் வழி வகை செய்யவில்லை.

## புகார் அளியுங்கள்!

**ஒருவேளை நீங்கள் எடுத்துச் செல்லும் உணவுப் பொருளில் கலப்படம் இருப்பது ஆய்வகச் சோதனையில் உறுதி செய்யப்பட்டால், ஆய்வுக்காக நீங்கள் செலுத்திய கட்டணம் உங்களுக்கே, திருப்பி அளிக்கப்படும்!**

இந்த அமைப்பின் இணையதள முகவரி:

**http://www.fassai.gov.in./home**

## உணவு தரம் பற்றிய புகார்களுக்கு

**SMS or Whatsapp**

**94440 42322**

**Email: unavupukar@gmil.com**

**ஆணையாளர்**

உணவு பாதுகாப்புத்துறை

# மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்புவது எப்படி?



**காவல் நிலையத்தில் புகார் மனு வழங்கி அப்புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் அல்லது நடவடிக்கையில் திருப்தி அளிக்காத போது மேல் முறையீடாக மாவட்ட கண்காணிப்பாளருக்கு மனு அனுப்பலாம்! அந்த மனுவின் மாதிரி கீழே...!**

மனுதார்:

பெறுநர்:

திரு.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், ..............

.................. மாவட்டம்.

மதிப்பு மிகுந்த அய்யா,

பொருள் :

குவி.மு.ச. 1973 இன் 154(3) வது பிரிவு படி மேல் முறையீட்டு விண்ணப்பம் பணிந்தனுப்பப்படுகிறது.

பார்வை:

காவல் ஆய்வாளர், சீர்மிகு காவல் நிலையம்,

............................

......................... மாவட்டம் . மனு நாள் :................

1.மனுதாராகிய நான் பார்வையில் காணும் புகார் மனுவை கடந்த......... . தேதியில் .................. காவல் நிலையத்தில் நேரில் / பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளேன். மேற்கண்ட எனது புகார் மனு மீது மேற்காணும் காவல் நிலையத்தினர் நாளது தேதி வரை எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை.

2. தமிழ்நாடு அரசாணை நிலை எண் 73 / 2018 நாள் : 11 062018 இல் பொதுமக்களின் குறை தீர் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நடைமுறைகள் அறிவுறுத்தல்கள் வெளி யிடப்பட்டுள்ளது

தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் அத்தியாயம் 22 இல் பத்தி 167 பிரிவு

(ii) க்கு திருத்தம் செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மனுக்களை பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் மனுவை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் உடனடியாக அனுப்பப்பட வேண்டும் என்றும் மனுவைப் பெற்றுக் கொண்ட 30 தினங்களுக்குள் குறை தீர்க்கப்பட வேண்டும் என்றும் மனுதார் அம்மனு தொடர்பாக அலுவலகத்திற்கு நேரில் வந்து கேட்கும் போது அம்மனு மீது எடுக்கப்பட்டக நடவடிக்கை குறித்து விபரம் தெரிவித்தல் வேண்டும் என்றும் ஏதேனும் காரணங்களுக்காக மனுவை இறுதி செய்ய கூடுதல் கால அவகாசம் தேவை என்றால் அது குறித்து மனுதாருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் மனுதாரின் கோரிக்கையை ஏற்க இயலாத நிகழ்வில் அதற்குரிய காரணத்துடன் கூடிய பதிவை சம்பந்தப்பட்ட மனு தாருக்கு 30 தினங்களுக்குள் தெரிவிக்கலாம் என்றும் தமிழ்நாடு அரசு புதிய அரசாணையை இயற்றியுள்ளது.

**மனுக்களை பெற்றுக் கொண்ட 3 தினங்களுக்குள் மனுவை பெற்றுக் கொண்ட தற்கான ஒப்புதல் உடனடியாக அனுப்பப்பட வேண்டும் என்றும் மனுவைப் பெற்றுக் கொண்ட 30 தினங்களுக்குள் குறை தீர்க்கப்பட வேண்டும்**

3. மேலும் காவல் நிலைய ஆய்வாளர் புகாரை பெற்றுக் கொண்டவுடன் அது பிடியாணை வேண்டா குற்றமாக இருந்தால் உடனடியாக FIR பதிவு செய்ய வேண்டும். பிடியாணை வேண்டும் குற்றமாக இருந்தால் அந்த குற்றத்தை விசாரணை செய்ய, குற்றவியல் நடுவரின் அறிவுறுத்தலை பெற வேண்டும். சாதாரண மனுக்களை பெறும்போது, அவை உடனடியாக மனுக்கள் பதிவேட்டில் (CSR) பதிவு செய்யப்பட்டு, புகார்தாரருக்கு உடனடியாக சிஷிஸி நகல் கொடுக்க வேண்டும். இவைகளை கடைபிடிக்காதது சட்ட விரோதமானதாக கருதப்பட்டு கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் RC. NO /62868/குற்றம் /1(2)/2001, நாள் 31.3.2001 ன் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மேலும் இது தொடர்பாக அரசாணை எண். 865, உள் (காவல் 1) துறை, நாள் 9.6.1997.என்ற அரசாணை உள்ளது. மேலும் தலைமை அலுவலக நிலை ஆணை 133622/குற்றம் 1(1)/97, நாள் 17.6.1997 ம் உள்ளது.

4. மேலும் ஒரு கோரிக்கை விண்ணப்பம் / புகார் மனு மீது மனுச் செய்த' 1 மாத காலங்களுக்குள் நிறைவேற்றுகை செய்யப்பட்டு மனுதாருக்கு தகுந்த பரிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று சென்னை, உயர் நீதிமன்றம், வழக்கு எண்:W. P.No.20452 of 2014 தீர்ப்புரை நாள்: 01.08.2014 வழக்கில் ஒரு மகத்தான தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் தீர்ப்புரையானது மனு தாராகிய எனது இவ்வழக்குக்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 1950 இன் 14வது பிரிவு படி பொருந்தும் என மனு தாராகிய என்னால் கருதப்படுகிறது. மேலும் பார்வையில் காணும் எனது புகார் மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரருக்கு ஆதரவாக ஒரு தலைபட்சமாக..... ........................ காவல் நிலையத்தினர் செயலாற்றி வருகின்றனர். இதன் காரணங்களால் மனு தாராகிய நான் அநேக மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன்.

5. ஆகையால் தயவு செய்து குவி.மு.ச. 1973 இன் 154(3) வது பிரிவு படி இம்மனுவையே மேல் முறையீடாக ஏற்றுக் கொண்டு தங்களின் யுக்திக்கு ஏற்றவாறு பார்வையில் காணும் எனது புகார் மனு மீது நேர்மையான விசாரணை மேற்கொண்டு மனுதாரரின் நீதியின் நோக்கம் நிறைவேற ஆவண செய்ய வேணுமாய் மிகவும் பணிவோடு பிரார்த்திக்கப்படுகிறது.

மனுதார்

தேதி :

இடம்:

இம்மனுவையே பிரமாணமாக இந்திய சாட்சிய சட்டம் 1872 இன் 70வது பிரிவு படி இதில்............ ......... தேதியன்று என்னால் கையொப்பம் செய்யப்படுகிறது.

# பயனுள்ள அழகு குறிப்புகள் உங்களுக்காக ..!!!

**ஆமணக்கு எண்ணெய் தடவி வர புருவம் அடர்த்தியாக வளரும்.**

2. முளைக்கட்டிய கருப்பு கொண்டைக் கடலையை தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வந்தால் தலைமுடி நன்கு வளரும்.

3. தேங்காய்ப்பால் தடவி குளித்து வந்தால் நாளடைவில் செம்பட்டை முடி சரியாகும்.

4. பப்பாளிப் பழத்தை மசித்து பூசி வர முகப்பொலிவு அதிகரிக்கும்.

5. துளசி இலை சாற்றை முகப்பரு மேல் பூசி வந்தால் முகப்பரு மறையும்.

6. வாழைப்பழத்தோலை லேசாக சூடுபடுத்தி கண்களின் மேல் வைக்க கருவளையம் குறையும்.

7. உதட்டில் வெண்ணெய் தடவி வந்தால் ஷைனிங்காக இருக்கும்.

8. நகங்களில் சிதைவு ஏற்படாமலும், வெண்மையாகவும் இருக்க சூரியகாந்தி எண்ணெயை கை, கால் நகங்களில் தடவ வேண்டும்

9. பாதாம் பருப்பை பாலில் அரைத்து இரவில் முகத்தில் தொடர்ந்து பூசி வந்தால் முகம் பொலிவு பெறும்.



10. முட்டையின் வெள்ளைகரு ,தேன்,மாதுளை ஜூஸ் மூன்றையும் கலந்து அரை மணி நேரம் முகத்தில் பூசிவிட்டு முகம் கழுவினால் முகத்தில் எண்ணெய் பசை குறையும்.

11. பாதாம் பருப்பை அரைத்து தேன், எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவிவர முகம் பளப்பளப்பாகும்.

12. சருமம் உலராமல் பளபளப்புடன் இருக்க, தினமும் பசும்பாலை தேய்த்துவிட்டு குளியுங்கள்.

13. பாதாம் பருப்பு, பாலாடை, எலுமிச்சைப் பழச்சாறு ஆகியவற்றை சேர்த்து அரைத்து முகம் , கழுத்து ஆகிய பகுதிகளில் பூசி வந்தால் வறண்ட சருமம் மாறும்.

14. எலுமிச்சை பழச்சாறு, பன்னீர் மற்றும் தயிர் சேர்த்து கலந்து முகம் மற்றும் கழுத்தில் பூசி ஊற வைத்து பிறகு கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்.

15. பாசிப் பருப்பை தேங்காய் பாலில் ஊறவைத்து அரைத்து அதனுடன் மஞ்சள் பொடியை சேர்த்து முகத்தில் பூசி வந்தால் முகம் மென்மையாக காணப்படும்.

16. கொத்தமல்லி மற்றும் மஞ்சள் பேஸ்ட் செய்து முகத்தில் தடவி வந்தால் கரும்புள்ளிகள் குறையும்.

17. ஒரு துண்டு வசம்பு எடுத்து திருநீற்றுப்பச்சிலை சாறு விட்டு அரைத்து தடவி வந்தால் முகப்பரு குறையும். சருமம் பளபளப்பாகும்.

18. பூந்திக் கொட்டையைத் தண்ணீரில் ஊற வைத்து அந்த நுரையைக் கொண்டு

நகங்களை கழுவினால் நகங்கள் பளிச்சென்றும் சுத்தமாகவும் காணப்படும்.

19. பாதாம் எண்ணெயை எடுத்து உடல் முழுவதும் தேய்த்து சிறிது நேரம் வைத்திருந்து பின்பு குளித்து வர சருமம் மென்மையாகும்.

20. சர்க்கரையுடன் சிறிது கிளிசரின் சேர்த்துக் தடவி வந்தால் உள்ளங்கை மென்மையாக மாறும்

**ரோஸ்மேரி இலைகளை எடுத்து நீர் விட்டு நன்றாக காய்ச்சி பிறகு சிறிது நேரம் வைத்திருந்து வடிகட்டி இந்த நீரை கொண்டு தலையை அலசி வந்தால் முடி உதிர்வது குறையும்.**

21. தாமரை, ரோஜா, ஆகிய மலர்களில் ஒன்றை எடுத்து அடிக்கடி கண் களில் ஒற்றிக் கொண்டால் கண் இமைகள் அழகுடன் காட்சியளிக்கும்.

22. முட்டையின் வெள்ளைக் கருவுடன் எலுமிச்சம் பழச்சாற்றை கலந்து முகத்தில் தடவி வந்தால் முக சுருக்கங்கள் குறையும்.

23. எலுமிச்சை பழச்சாறுடன் வெள்ளரிக் காய் சாறு கலந்து கரும்புள்ளி இருக்கும் இடத்தில் தடவி வந்தால் கரும்புள்ளிகள் குறையும்.

24. பாதாம் எண்ணெய் மற்றும் ஆலிவ் எண்ணெய் எடுத்து நன்றாக கலந்து தலையில் தேய்த்து நன்கு ஊறிய பிறகு தலைக்கு குளித்து வந்தால் பொடுகு குறையும்.

25. தேன் மற்றும் எலுமிச்சை பழச்சாறு கலந்து முகம் கழுவி வந்தால் தோல் சுருக்கம் குறைந்து பளபளப்பாகும்.

26. தயிரில் கசகசாவைச் சேர்த்து அரைத்து தினமும் இரவு படுக்கச் செல்லும் முன்பாக பூசி வந்தால் முகம் பளப்பளப்பாகும்.

27. முட்டையின் வெள்ளை கருவை எடுத்து நன்றாக கலக்கி உச்சந்தலை மற்றும் முடியில் தடவி அரை மணி நேரம் ஊற வைத்து பிறகு குளித்து வந்தால் முடி உதிர்வது குறையும்.

28. நெல்லிக்காயை சாறு எடுத்து அதனுடன் சிறிது இஞ்சிச்சாறு கலந்து தினமும் காலையில் குடித்து வந்தால் தேவையற்ற கொழுப்பு குறைந்து உடல் பருமன் குறையும்.

29. அதிமதுரத்தை பொடி செய்து அதனுடன் சிறிது குங்குமப்பூ சேர்த்து பால் விட்டு கலக்கி தலையில் தேய்த்து வந்தால் முடி உதிர்வது குறைந்து முடி வளரும். பொடுகு குறையும்.

30. பலாப்பழம் எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் முகம் பொலிவு பெற்று சதை போட்டு இளமை கூடும்

31. சம அளவு நெல்லிக் காய் சாறு, பாதாம் எண்ணெய் எடுத்து அதில் சிறிது எலுமிச்சைச்சாறு கலந்து இரவு தலையில் நன்றாக தேய்த்து காலையில் தலைக்கு குளித்து வந்தால் கூந்தல் கருப்பாகும்.

32. குங்குமப்பூவை பாலேட்டில் இரவு முழுவதும் ஊற வைத்து காலையில் எடுத்து நன்றாக பிசைந்து உதட்டில் தடவி வந்தால் உதட்டின் கருமை நிறம் மாறி உதடு சிவப்பாகும்.

33. ரோஸ்மேரி இலைகளை எடுத்து நீர் விட்டு நன்றாக காய்ச்சி பிறகு சிறிது நேரம் வைத்திருந்து வடிகட்டி இந்த நீரை கொண்டு தலையை அலசி வந்தால் முடி உதிர்வது குறையும்.

34.சோற்று கற்றாழை ஜெல்லுடன் வெள்ளரிக்காயை சேர்த்து நன்றாக அரைத்து கருவளையத்தின் மீது தடவினால் கருவளையம் குறையும்.

35. கேரட்டை நன்றாக துருவி போட்டு அதில் தேன் சேர்த்து நன்கு கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் குறையும்.

36.மருதோன்றி காயை அரைத்து நகத்தில் தடவி வந்தால் நகம் வளரும்.

37.சந்தனத்தை நன்றாக பொடியாக்கி அதனுடன் பன்னீர் கலந்து கரும்புள்ளிகள்

மீது தடவி வந்தால் கரும்புள்ளிகள் குறையும்.

38. வெள்ளரிக்காயை நன்கு மைய அரைத்து கரும்புள்ளிகள் மீது தடவி வைத்து நன்கு காய்ந்ததும் குளிர்ந்த நீரால் கழுவி வந்தால் கரும்புள்ளிகள் குறையும்.

39. கசகசாவைச் சிறிது எடுத்து, பாலில் ஊறவைத்து அதை தலையில் தேய்த்து குளித்து வந்தால் பொடுகு குறையும்.

40 செம்பருத்தி இலையை அரைத்து சீயக் காய்த்தூளுடன் சேர்த்து தலைக்குத் தேய்த்துக் குளித்து வர தலையில் பொடுகு குறையும்.

41. மஞ்சள் கரிசலாங்கண்ணி இலை சாற்றை, தலையில் தேய்த்தால் முடி உதிர்வது குறையும்.

42.தினமும் பசு வெண்ணெய்யுடன் கறிவேப்பிலைப் பொடியையும் சேர்த்துக் சாப்பிட்டு வந்தால் இளநரை குறையும்.

43. .ஆலிவ் எண்ணெய்யை தலையில் தேய்த்து குளித்து வந்தால் கூந்தல் மின்னும்.

44. தினமும் காலையில் தண்ணீரில் தேன் கலந்து குடித்து வந்தால்

உடல் பளபளப்பாகும்.

45. சிறுபயறு, கடலை மாவு, தேன் கலந்து, குளித்து வர உடல் அழகு பெறும்.

46.அருகம்புல் சாற்றில் மஞ்சள் கலந்து கால் களில் தேய்த்தால் கால்களின் கடினத்தன்மை குறையும்.

47. ஆலிவ் எண்ணெயில் ஒரு முட்டை கலந்து தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் தலைமுடிஉதிர்வது குறையும்.

48. தர்ப்பூசணி பழத்தின் அடியில் இருக்கும் வெள்ளை பகுதியினை கால்களுக்கு தேய்க்க கால்கள் மிருதுவாக மாறும்.

49. தயிர், முட்டை, எலுமிச்சை சாறு கலந்து தேய்த்துக் குளிக்க பொடுகு குறையும்.

50 திராட்சை சாற்றை மசாஜ் செய்ய கழுத்திலுள்ள கருமை குறைந்து, கழுத்து அழகாகும்.

51. பீட்ரூட்டை உதட்டில் அடிக்கடி அழுத்தித் தேய்த்து வர இதழ்கள் சிவக்கும்.

52. தர்பூசணி பழச்சாறு, பயித்தமாவு இரண்டையும் கலந்த கலவையை முகத்தில் பூசி வந்தால் முகம் புதுப்பொலிவு பெறும்.

53.எலுமிச்சைச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் பற்கள் பளிச்சென மாறும்.

54. தினமும் இரவில் புருவங்களில் ஆலிவ் எண்ணெயை தடவிக் கொண்டு படுத்தால் புருவங்கள் மிருதுவாகவும்,வ சீகரமாகவும் இருக்கும்.

55. பாதாம் பருப்புகளை பாலுடன் சேர்த்து நன்றாக அரைத்து கண்களைச் சுற்றி பேக் போடுவதால் கண்களில் உள்ள கருவளையம் மறையும்.

56. எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து தடவினால், முகத்தில் கரும்புள்ளிகள் குறையும்.

57. கிளிசரின் மற்றும் ரோஸ் வாட்டர் கொண்ட கலவையை உதடு வெடிப்பின் மீது பூசி வந்தால் வெடிப்புகள் மறைந்து உதடுகள் மென்மையாகும்.

58. பாலாடை குங்குமப் பூ கலந்து கழுத்தில் தடவி 30 நிமிடம் கழித்து கழுவினால் சிறுசிறு கரும்புள்ளிகள் மறையும்.

59. பாதாம் எண்ணெயுடன் தேன் கலந்து நன்றாகக் குழைத்து முகத்தில் பூசி வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் முகம் பிரகாச மாகும்.

60.மா மரத்தின் இலையை எடுத்து அதன் பாலைக் கால் வெடிப்பில் பூசி வந்தால் கால் வெடிப்பு குறையும்.

61. ஆலிவ் எண்ணெய்யை லேசாக சூடாக்கி விரல்களின் மீது தேய்த்து ஊற வைத்தால் நகங்கள் உடையாமல் இருக்கும்.

62 நெல்லிக்காயை பாலில் அரைத்து பிழிந்து சாறு எடுத்து கொதிக்க வைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வந்தால் முடி நன்றாக வளரும்.

63. துளசி இலையுடன் கற்பூரம் சேர்த்து அரைத்து முகப்பரு மேல் பூசி வந்தால் முகப்பரு குறையும்.

64. ஆலிவ் எண்ணெய்யை லேசாக சூடாக்கி விரல்களின் மீது தேய்த்து ஊற வைத்தால் நகங்கள் உடையாமல் இருக்கும்.

# பள்ளி கல்லூரி மாற்றுச் சான்றிதழ் தொலைந்து போனால் சட்டப்படி என்ன செய்வது!

**பள்ளி மாற்றுச் சான்றிதழ்** (Transfer Certificate) **தொலைந்துபோனால் உடனடியாக காவல் நிலையத்தில் புகாரளிக்க வேண்டும். அவர்கள் கண்டுபிடிக்க முடியவில்லை என்கிற சான்றை வழங்குவர்.**

விண்ணப்பத்துடன் வட்டாட்சியரிடம் பள்ளி மாற்றுச் சான்றிதழ் தொலைந்துவிட்டது என்ற சான்றிதழை வாங்கி இணைத்துக் கொடுக்க வேண்டும். இத்துடன் பள்ளிச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தையும் செலுத்தி ரசீதை இணைக்க வேண்டும்.

எந்தப் பள்ளியில் படித்தீர்களோ அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியரிடமே விண்ணப் பிக்கலாம். இணைக்க வேண்டிய ஆவணங்கள்: மதிப்பெண் பட்டியல் நகல், பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல், கட்டணம் செலுத்திய ரசீது.

**கல்லூரிச் சான்றிதழ் தொலைந்து போனால்:**

கல்லூரி மாற்றுச் சான்றிதழ் தொலைந்து போனால் உடனடியாக காவல் நிலையத்தில் புகாரளிக்க வேண்டும். அவர்கள் கண்டுபிடிக்க முடியவில்லை என்கிற சான்றை வழங்குவர்.

அத்துடன் சான்றிதழ் தொலைந்தது குறித்து வட்டாட்சியரிடம் மனு செய்ய வேண்டும். அவர் அந்தப் பகுதி வருவாய் ஆய்வாளரால் விசாரணை நடத்திய பின்னர் சான்றிதழ் தொலைந்தது உண்மை எனச் சான்று வழங் குவார்.

பின்னர் காவல்துறை அளித்த சான்று, வட்டாட்சியர் அளித்த சான்று இவற்றுடன் கல்லூரி நிர்ணயம் செய்த தேடுதல் கட்டணத்தைச் செலுத்தி கல்லூரி முதல்வருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**பள்ளி மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து போனால்:**

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து போனால் முதலில் அந்தப் பகுதியிலுள்ள காவல் நிலையத்தில் புகாரளிக்க வேண்டும்.

அத்துடன் மதிப்பெண் பட்டியலின் எண், பதிவு எண், தேர்வு நடந்த வருடம், மாதம் ஆகிவற்றைக் குறிப்பிட்டு அந்தப் பகுதியில் உள்ள ஒரு முன்னணி நாளிதழில் அறிவிப்பு விளம்பரம் வெளியிட வேண்டும்.

பின்னர் காவல் நிலையத்தில் புகாரளித்த தற்கான ரசீது, பிரசுரமான விளம்பரம் ஆகிய வற்றை இணைத்து பள்ளித் தலைமை ஆசிரியர் வழியாக மாவட்டக் கல்வி அதிகாரிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

இதனுடன் தேடுதல் கட்டணம் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்ப வேண்டும்.

மனுவைப் பரிசீலித்து மாவட்டக் கல்வி அதிகாரி மாநில பள்ளிக் கல்வித்துறைக்கு விண்ணப்பம் செய்வார்.

**கல்லூரி மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து போனால்:**

கல்லூரி மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து விட்டால் கடைசியாகப் படித்த கல்லூரி முதல்வருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட கல்லூரி முதல்வர் மதிப்பெண் சான்றிதழின் எண், பதிவு எண், தேர்வு நடந்த வருடம் ஆகிய வற்றைச் சரிபார்த்து பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்குப் பரிந்துரைத்து எழுதுவார்.

இத்துடன் மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற் கான கட்டணத்தை வங்கி வரை வோலையாக எடுத்து அனுப்ப வேண்டும். மனுவைப் பெற்றுக் கொண்ட தேர்வுக் கட்டுப் பாட்டு அதிகாரி மதிப்பெண் சான்றிதழ் வழங்குவார்.

விண்ணப்பம் செய்ததிலிருந்து 60 நாட் களுக்குள் இச்சான்றிதழ்கள் கிடைக்கப்பெறும்.

# இந்திய ஒப்பந்தச் சட்டம் , 1872 ஒரு அறிமுகம்!

## The Indian Contract Act , 1872 - An Introduction

**ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்திய நாட்டின் வட்டார குழலுக்கு பொருந்தக் கூடிய ஆங்கில ஒப்பந்தச் சட்டமானது. முதலாம் ஜார்ஜ் மன்னரால் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு 1726 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பட்டயத்தால்** ( by the Charter of 1726 ) **சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணப் பெரு நகரங்களில்** ( Presidency Towns) **அறிமுகப்படுத்தப்பட்டது.**

பின்னிட்டு 1781 ஆம் ஆண்டில் பிரிட்டன் பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட தீர்வகைச் சட்டமானது (Act of settlement), இசுலாமியர்கள் மற்றும் இந்துக்களிடையே மரபுரிமை மற்றும் வாரிசுரிமை , மற்றும் ஒப்பந்தங்கள் குறித்த விஷயங்களைப் பொறுத்து எழும் வழக்குகளானது அந்தந்த மதத்தினருக்குப் பொருந்தக் கூடிய சட்டத்தால் தீர்க்கப்பட வேண்டும் என்று வழிவகை செய்தது. இந்நிலைப்பாடு, வழக்கிற்குரிய தரப்பினர்கள் இருவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவராக இருக்கும் பொழுது மட்டுமே ஆகும் . எனவே அத்தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் இசுலாமியராகவும் , மற்றொரு தரப்பினர் இந்துவாகவும் இருப்பின் , அவர்களுக்கிடையிலான வழக்கு பிரதிவாதிக்குரிய சட்டங்கள் மற்றும் வழக்காறுகளால் (by the laws and usages of the defendant) தீர்க்கப்பட வேண்டும் என்றும் அச்சட்டத்தில் மேலும் வகை செய்யப் பட்டிருந்தது .




இவையெல்லாம் மேற்கண்ட பெரு நகரங்களைப் பொறுத்து மட்டுமே பொருந்தக் கூடியதாகும் . சிறு நகரங்களில் (mofussil ) அதாவது பெரு நகரங்களுக்கு வெளியில் உள்ள நிலப்பரப்புகளுக்கு பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்து எச்சட்டமும் இல்லை . எனவே , அங்கெல்லாம் ஒப்பந்தங்கள் குறித்து எழும் வழக்குகளானது நீதி, நேர்மை மற்றும் நன் மனச்சான்றின் ( Justice , Equity and Good Conscience ) அடிப்படையில் தீர்க்கப்பட்டன

இவ்வாறு இந்தியாவில் ஒப்பந்தங்கள் குறித்து முன்னதாக இருந்த சட்டங்களில் ஒரே சீரான , நிச்சயமான தன்மை இல்லை . அனைவருக்கும், அனைத்து நிலப்பரப்புகளுக்கும் ஒரே மாதிரியாக பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்த சட்டம் இந்தியாவில் அமைந்திருக்கவில்லை. எனவே இந்நிலையைக் களையும் பொருட்டு, 1872 ஆம் ஆண்டில் இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அது அந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் முதல் நாளில் இருந்து அமலுக்கு வந்தது .

இச்சட்டத்தில் மொத்தம் 238 பிரிவுகள் உள்ளன .

அவற்றில் 1 முதல் 75 வரையிலான பிரிவுகள் ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகள் ( General Prin ciples of Contract ) குறித்து விளக்குகின்றன .

அதற்கடுத்து வரும் சட்டப் பிரிவுகள் சிறப்பு ஒப்பந்தங்கள் அல்லது தனிவகை ஒப்பந்தங்கள்

( Special Con tracts ) குறித்து விளக்குகின்றன .

சிறப்பு ஒப்பந்தங்கள் என்பன , ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தம் ( பிரிவுகள் 124 முதல் 147 வரை ) ( Indemnity and Guarantee ) , ஒப்படைவு ( பிரிவுகள் 148 முதல் 181 வரை ) ( Bailment ) , முகவாண்மை ( பிரிவுகள் 182 முதல் 238 வரை ) ( Agency ) போன்றவையாகும் . மேற்கண்ட பிரிவுகளுக்கு இடையில் வரும் 76 முதல் 123 வரையிலான பிரிவுகள் முன்னதாக சரக்குகள் விற்பனை ( Sale of Goods ) ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிட்டன . பின்னிட்டு 1930 ஆம் ஆண்டில் தனியாக கொண்டு வரப்பட்ட சரக்குகள் விற்பனைச் சட்டத்தால் ( Sale of Goods Act , 1930 ) மேற்படி பிரிவுகள் , இந்திய ஒப்பந்தச் சட்டத் திலிருந்து நீக்கப்பட்டன .

அதுபோல் , மேற்படி சட்டத்தில் 239 முதல் 266 வரையிலான பிரிவுகள் , கூட்டாண்மை ஒப்பந்தம் ( Part nership ) குறித்து வகை செய்திருந்தன . ஆனால் 1932 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தால் ( Indian Partnership Act , 1932), அப்பிரிவுகளும் இந்திய ஒப்பந்தச் சட்டத் திலிருந்து நீக்கப்பட்டன.

# பயணிகளின் புகார் அடிப்படையில் மேலும் 5 தனியார் உணவகங்களில் அரசு பேருந்துகள் நின்று செல்ல தடை

**பயணிகளின் புகார் அடிப்படையில் மேலும் 5 தனியார் உணவகங்களில் அரசு பேருந்துகள் நின்று செல்ல தடை விதித்து போக்குவரத்து துறை உத்தரவிட்டுள்ளது.**

இதுதொடர்பாக தமிழக போக்குவரத்து துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது: நெடுஞ்சாலைகளில் இருக்கும் சில தனியார் உணவகங்களில் தரமற்ற உணவுகள் மற்றும் கூடுதல் விலைக்கு உணவு பொருட்கள் விற்பதாக பயணிகள் புகார் தெரி வித்து வந்தனர்.

அதன்படி, போக்குவரத்து துறை அமைச்சர் உத்தரவின்பேரில், பொது மக்களின் புகார்களை ஒட்டி மாமண்டூர் பயணவழி உணவகத்தில் நடத்திய ஆய்வில் தரமற்ற உணவு வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது.

அதைத் தொடர்ந்து அரசு விரைவுப் போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் இளங்கோவன் தலைமையில் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் குழு, நெடுஞ்சாலை தனியார் உணவகங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டது.

அதில் விக்ரவாண்டி அருகே செயல்பட்டு




வரும் அண்ணா, உதயா, வேல்ஸ், ஹில்டா மற்றும் அரிஸ்டோ ஆகிய 5 உணவகங்கள் சுகாதாரமற்ற உணவுப்பொருட்களை அதிக விலைக்கு விற்றது ஆய்வின் போது கண்டறியப் பட்டது.

மேற்கண்ட உணவகங்களில் அரசு பேருந்துகளை நிறுத்த தடை செய்யப் பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட உணவகங்களின் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிறுத்துவதற்காக போடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தெரிந்து கொள்ளுங்கள் இந்தியாவில் சைபர் கிரைம் சட்டம்!

**கணினி மூல ஆவணங்களை சேதப் படுத்துதல் Sec.65**

2. கணினி அமைப்புகளுடன் ஹேக்கிங், தரவு மாற்றம் பிரிவு 66

3. தகவல் தொடர்பு சேவை போன்றவற்றின் மூலம் தாக்குதல் செய்திகளை அனுப்புதல். Sec.66A

4. திருடப்பட்ட கணினி வள அல்லது தகவல் தொடர்பு சாதனத்தை நேர்மையற்ற முறையில் பெறுதல் Sec.66B


5. அடையாள திருட்டு Sec.66C

6. கணினி வளத்தைப் பயன்படுத்தி ஆளுமை மூலம் ஏமாற்றுதல் Sec.66D

7. தனியுரிமை மீறல் Sec.66E

8. சைபர் பயங்கரவாதம் Sec.66F

9. ஆபாசமான பொருட்களை மின்னணு வடிவத்தில் வெளியிடுதல் அல்லது பரப்புதல் .67




10. பாலியல் வெளிப்படையான செயல் போன்றவற்றைக் கொண்ட பொருளை மின்னணு வடிவத்தில் Sec.67கி இல் வெளியிடுதல் அல்லது பரப்புதல்

11. பாலியல் ரீதியான செயலில் குழந்தை களை சித்தரிக்கும் பொருளை வெளி யிடுவதற்கோ அல்லது கடத்துவதற்கோ தண்டனை.

**மின்னணு வடிவத்தில் Sec.67B**

11. இடைத்தரகர்களால் தகவல்களைப் பாது காத்தல் மற்றும் வைத்திருத்தல்Sec.67C

12. எந்தவொரு தகவலையும் இடைமறித்தல் அல்லது கண்காணித்தல் அல்லது மறைகுறியாக்கம் செய்வதற்கான வழி முறைகளை வெளியிடுவதற்கான அதிகாரங்கள்

**எந்த கணினி வளமும்** Sec.69

13. எந்தவொரு கணினி மூலமாகவும் எந்த வொரு தகவலையும் பொதுமக்கள் அணுகுவதைத் தடுப்பதற்கான வழி முறைகளை வெளியிடுவதற்கான அதி காரம்

**வள** Sec.69A

எந்தவொரு கணினி வளத்தின் மூலமும் போக்குவரத்து தரவு அல்லது தகவல் களை கண்காணிக்கவும் சேகரிக்கவும் அங்கீகரிக்கும் அதிகாரம்

**சைபர் பாதுகாப்பு பிரிவு 69** H

15. பாதுகாக்கப்பட்ட அமைப்புக்கு அங்கீ கரிக்கப்படாத அணுகல் Sec.70

16. தவறாக சித்தரிப்பதற்கான அபராதம் பிரிவு 71

17. ரகசியத்தன்மை மற்றும் தனியுரிமையை மீறுதல் Sec72

18. தவறான டிஜிட்டல் கையொப்ப

சான்றிதழ்களை வெளியிடுதல் Sec.73

19. மோசடி நோக்கத்திற்காக வெளியீடு பிரிவு 74

29. இந்தியாவுக்கு வெளியே செய்யப்படும் குற்றம் அல்லது மீறல்களுக்கு விண்ணப்பிக்க சட்டம்

21. இழப்பீடு, அபராதம் அல்லது பறிமுதல் மற்ற தண்டனைகளில் தலையிடக்கூடாது Sec.77

22. குற்றங்களின் கூட்டு. Sec.77A

23. அறியக்கூடியதாக இருக்க மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை கொண்ட குற்றங்கள் Sec.77B

24. சில சந்தர்ப்பங்களில் இடைத்தரகரின் பொறுப்பிலிருந்து விலக்கு Sec.79

25. குற்றங்களைத் தூண்டுவதற்கான தண்டனை Sec.84B

26. குற்றங்களைச் செய்ய முயற்சித்ததற்கான தண்டனை Sec.84C

* குறிப்பு *: I.T. இன் Sec.78. இந்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சட்டம் அதிகாரம் அளிக்கிறது

27. நிறுவனங்களின் குற்றங்கள் பிரிவு 85

28. மின்னஞ்சல் மூலம் அச்சுறுத்தும் செய்திகளை அனுப்புதல் Sec .503 IPC

29. ஒரு பெண்ணின் அடக்கத்தை அவமதிக்கும் நோக்கம் கொண்ட சொல், சைகை அல்லது செயல் Sec.509 IPC

30. மின்னஞ்சல் மூலம் அவதூறு செய்திகளை அனுப்புதல் Sec .499 IPC

31. போகஸ் வலைத்தளங்கள், சைபர் மோசடிகள் பிரிவு .420 ஐபிசி

32. மின்னஞ்சல் ஸ்பூஃபிங் செக் .463 ஐபிசி

33. தவறான ஆவணத்தை உருவாக்குதல் Sec.464 IPC

34. ஏமாற்றுவதற்கான நோக்கத்திற்காக மோசடி Sec.468 IPC

35. நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்திற்காக மோசடி செய்தல் .469 ஐபிசி

36. வெப்ஜாக்கிங் செக் .383 ஐபிசி

37. மின்னஞ்சல் துஷ்பிரயோகம் பிரிவு .500 ஐபிசி

38. குற்றவியல் மிரட்டலுக்கான தண்டனை Sec.506 மிறிசி

39. அநாமதேய தகவல்தொடர்பு மூலம் குற்றவியல் மிரட்டல் Sec.507 IPC

40. பதிப்புரிமை மீறப்படும்போது: ஒரு படைப்பின் பதிப்புரிமை மீறப்பட்டதாகக் கருதப்படும்

41. இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட பதிப்புரிமை அல்லது பிற உரிமைகளை மீறும் குற்றம். தெரிந்தே எந்த நபரும்

Sec.63 இன் மீறலை மீறுகிறது அல்லது உதவுகிறது

42. இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த கோவிஷன்களில் மேம்படுத்தப்பட்ட அபராதம் Sec.63A

43. கணினி நிரலின் மீறல் நகலை ஒரு குற்றமாகப் பயன்படுத்துவதை அறிவது Sec.63B

44. ஆபாச நொடி. 292 ஐபிசி

45. பிளாக் மெயிலுக்கு நோக்கம் கொண்ட மிகவும் அநாகரீகமான அல்லது மோசமான விஷயம் அல்லது பொருளின் அச்சிடுதல் போன்றவை. Sec.292A மிறிசி

46. இளைஞருக்கு ஆபாசமான பொருட்களின் விற்பனை போன்றவை .293 ஐபிசி

47. ஆபாசமான செயல்கள் மற்றும் பாடல்கள் Sec.294 IPC

48. கணினி வன்பொருள் திருட்டு. 378

49. திருட்டுக்கான தண்டனை பிரிவு 379

50. மருந்துகள் ஆன்லைன் விற்பனை என்.டி. பி.எஸ் சட்டம்

51. ஆன்லைன் ஆயுத ஆயுத சட்டம்.



**K.தாந்தோணி**
மாநிலச் செயலாளர்- தமிழ்நாடு
மற்றும் துணை ஆசிரியர்,
தமிழ்நாடு நுகர்விழி

# ' FIR பதியப்பட்டால் அரசு வேலை கிடைக்காதா?

**தவறேதும் செய்யாத நிலையில் FIRஐ எப்படி நீக்குவது?" என பதிலைக் காண்போம்.**

அரசு வேலைக்கு ஏராளமானோர் விண்ணப் பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பிப்பவர்களைத் தேர்வுகள் நடத்தி தகுதி பெற்றவர்களை அரசுப் பணியமர்த்துகிறது. விண்ணப்பிப்பவரின் குற்றப் பின்னணி மற்றும் ஒழுக்கம் குறித்துத் தெரிந்து கொள்ளவே 'FIR பதியப்பட்டுள்ளதா?' என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஒருவர்மீது FIR பதியப்பட்டாலே அரசு வேலை கிடைக்காதா

"FIR பதியப்பட்டாலே அரசு வேலை கிடைப்பதற்கு சிக்கல் ஏற்படுமா என்பது எந்தக் குற்றத்திற்காக திமிஸி பதியப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து மாறுபடும். ஓவர் ஸ்பீட், லைசன்ஸ் இல்லாதது, பெட்டி கேஸ், இதைப் போன்ற வழக்குகளில் பதியப்படும் FIR மற்றும் சிவில் வழக்குகளில் பதியப்படும் FIR ஆல் அரசு வேலை கிடைப்பதில் எந்த பாதிப்பும் இல்லை. குற்றவியல் (Criminal கிரிமினல்) குற்றங்கள் புரிந்தவர் என்ற அடிப் படையில் ஒருவர் மீது பதியப்படும் FIR அரசு வேலை கிடைப்பதில் பிரச்சனை ஏற்படுத்தலாம். அதைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

**செய்யாத குற்றத்திற்காக ஒருவர் மீது திமிஸி பதியப்பட்டால்?**

புகார்தாரர் அளிக்கும் புகாரின் அடிப்படை யில் பதியப்படுவது தான் முதல் தகவல் அறிக்கை (First Information Report -FIR). அந்தப் புகாரை காவல்துறை விசாரித்து, விசாரணை முடிவுகளைக் குற்றப் பத்திரிக்கையாக (Charge Sheet) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும். ஒருவர்மீது FIR பதியப்பட்டால் அவர் குற்றம் சாட்டப்பட்டவர். FIRல் அளித்திருக்கும் புகாரை காவல்துறை விசாரித்த பிறகு அவர் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை என விசாரணை முடிவுகள் வந்தால் குற்றப் பத்திரிக்கையில் அது குறித்து விளக்கம் அளித்து FIR-ல் இருந்து அவர் பெயர் நீக்கப்படும். இதே போல் FIRல் குறிப்பிடாத நபர்கள் குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந் தால் குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டு அவர்கள் பெயர்கள் FIR-ல் சேர்க்கப் படும். குற்றங்களை அவர் தான் செய்தார் என நீதிமன்றத்தில் நிரூபண மானால் தான் அவர் குற்றவாளி.

**"FIR பதியப்பட்டாலே அரசு வேலை கிடைப்பதற்கு சிக்கல் ஏற்படுமா என்பது எந்தக் குற்றத்திற்காக FIR பதியப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து மாறுபடும்.**

செய்யாத குற்றத்திற் காகவோ, சந்தேக அடிப்படையிலோ ஒருவர் மீது FIR பதியப்படுகிறது. விசாரணையில் அவர் எந்தவகையிலும் குற்றத்தில் ஈடுபடவில்லை எனத் தெரிந்து குற்றப் பத்திரிக்கையில் அவர் பெயர் இடம் பெறவில்லை என்றால் எந்த பிரச்னையும் இல்லை. அல்லது நீதிமன்ற விசாரணையில் நிரபராதி என நிரூபணமானாலும் எந்தச் சிக்கலும் இல்லை. FIR பதிவதற்கு முன்பே




எதிர்த்தரப்பு புகாரைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் எந்த பிரச்னையும் இல்லை. ஆனால் நீதிமன்றத்திற்கு வழக்கு சென்ற பிறகு எதிர்த்தரப்புடன் சமரசம் அல்லது தீர்வு கண்டு விடுவிக்கப்பட்டால் அரசு வேலை கிடைப்பதில் பிரச்னை உண்டு. கிரிமினல் வழக்குகளிலும் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், அரசாங்க சொத்துக்களை சேதப்படுத்துதல், தொடர் குற்றங்கள், கொடுங்குற்றங்கள் புரிவது போன்ற குற்றங்கள் புரிந்திருந்தால் அரசு வேலை கிடைக்காது. ஒருவர்மீது வழக்குகள் நிலுவையிலிருந்தாலும் வேலை கிடைக்காது. நிலுவையில் உள்ள வழக்குகளிலிருந்து விடுபட்ட பிறகே வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. காவல்துறை போன்ற சீருடை பணியாளர்களை நியமிக்கும் பொழுது அவர்கள் குற்றப் பின்னணி கூடுதல் கவனத்தோடும், தீவிரமாகவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பணியில் இருப்பதால் அவர் நேர்மையானவராகவும், எந்த குற்றப் பின்னணியும் இல்லாதவராகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும்.

சிறைத் தண்டனையில் இருக்கும் நபருக்கு வேலை கிடைக்காது. சிறை தண்டனை அனுபவித்தவராக இருந்தாலும், ஒருவரை இருமுறை தண்டிக்கச் சட்டத்தில் இடமில்லை எனக் கருதி தண்டனைக் காலம் முடிந்த பிறகு வேலை கிடைக்கலாம்.

கிரிமினல் வழக்குகள் மட்டுமல்ல, எந்த வழக்கு சம்பந்தப்பட்ட FIR ஒருவர் மீது பதியப் பட்டிருந்தாலும், அதை அரசு வேலைக்கு விண்ணப்பிக்கும் பொழுது குறிப்பிட வேண்டும். 'இது தான் கொடுங்குற்றம் இல்லையே' என நினைத்து தன் மீதுள்ள FIR ஐ ஒருவர் குறிப்பிடாமல் விட்டாலோ, மறைத்தாலோ, போலீஸ் விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டு தகுதி நீக்கத்திற்கு ஆளாவார்கள். பொய் புகார் என விசாரணையில் தெரிய வரும் நிலையில் காவல்துறையே FIRஐ ரத்து செய்துவிடும். அப்படி ரத்து செய்யாத நிலையில் பிரதிவாதி உயர் நீதிமன்றத்தை அணுகி FIRஐ ரத்து செய்ய மனு அளிக்கலாம். நீதிமன்றம் விசாரித்துப் பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தொடரப்பட்டிருக்கிறது எனக் கருதினால் FIRஐ ரத்து செய்யலாம். இல்லையேல் வழக்கை இன்னும் விசாரிக்கவேண்டும் எனக் கருதி கீழ் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம்."

# Üó² Ü½õôèƒèO™ Ü‚ù£ªô†xªñ‡† õ£ƒ°‹ õN º¬øèœ!




## அரசு ஆணை எண்: 114

அரசு அலுவலகங்களுக்கு வரும் கடிதங்களை கையாள வேண்டிய வழிமுறைகளை பற்றி 2.8.2006 தேதியிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையினரின் அரசாணை எண்.114, 66, 89, பற்றி தெரிந்து கொள்வோம்.

அரசு அலுவலகங்களுக்கு நேரில் சென்று கடிதம் கொடுக்கும் போது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் உடனே வாங்கி கொண்டதற்கான ஏற்பு ரசீது (அக்னாலெட்ஜ்மெண்ட்) மனுதார ருக்கு கொடுக்க வேண்டும்.

அரசு அலுவலர் கொடுக்கும் ஏற்பு ரசீதில் மனுதாரரின் பெயர், முகவரி, யாருக்கு என்ன விசயமாக அனுப்பபட்டுள்ளது என்ற விவரமும், கடிதம் வாங்கும் அலுவலரின் கையெழுத்தும், அவர் வகிக்கும் பதவியின் பெயரும், அலுவலக முத்திரையும் தேதியுடன் இருக்க வேண்டும்.

தபால் மூலம் கடிதம் அனுப்பும் போதும் அதற்கான ஏற்பு ரசீது மனுதாரர்க்கு அதிக பட்சம் 3 நாட்களுக்குள் அனுப்பி வைக்கபட வேண்டும். அனுப்பும் புகாரின் மீது அதிகபட்சம் 60 தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க 60 தினத்திற்கு மேல் ஆகும் என்றால் இடைக்கால பதிலும், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையும், மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் 60 தின்ங்களுக்குள் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகள்படி கடிதங்களை கையாள அரசு, ஆணை 114 வலியுறுத்து கிறது. [அரசு ஆணை 114 என்பது அரசு ஆணை 66(23.02.1983) அரசு ஆணை 89(13/05/1999) மற்றும் மத்திய அரசு ஆணை 13013/1/2006(5.5.2006) ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது] எனவே, இனி நீங்கள் அரசு அலுவலகங்களுக்கு கடிதம் கொடுத்தால் அரசாணை எண்கள்: 114, 66, 89ன் படி ஏற்பு ரசீது கேட்டு வாங்குங்கள். இதுவே நமக்கு இறுதி நிவாரணம் கிடைக்க வழி வகுக்கும். அரசு அலுவலகங்களில் அரசாணைப்படி ஏற்பு ரசீது கொடுக்க மறுத்தால், அந்த அதிகாரியிடம் ஏற்பு ரசீது கொடுக்க இயலாது என கூறுவதனை எழுதி வாங்குங்கள் அல்லது அவரது கூற்றினை பதிவு செய்து கொண்டு மாவட்ட அல்லது மாநில அளவிலான துறை சார்ந்த மேலதிகாரிகளுக்கு புகாராக அனுப்புங்கள்.

# மடிப்பாக்கம் செய்திகள்







நமது பேரமைப்பின் சார்பாக, மாநில தலைவர் முனைவர் சி. பால் பர்னபாஸ் அவர்களின் அறிவுறுத்தலின் படி 19 வயதிற்கு கீழ் உள்ள சிறுவர்களுக்கான கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. இதில் நானும், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் திரு. நிதிஷ் குமார் அவர்களும் கலந்துகொண்டோம்.

இப்போட்டியை சிறப்பாக நடத்தி பரிசு வழங்கும் விழாவை ஏற்பாடு செய்த நம் அமைப்பின் ஆயுட்கால உறுப்பினர் திரு. வசந்த குமார் அவர்களுக்கு நன்றிகளும் பாராட்டுகளும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முனைவர் ம. சுரேஷ் குமார் MBA., D.Lit., (தேசிய நிர்வாக ஆலோசகர், மாநில இணை ஒருங்கிணைப்பாளர், மடிப்பாக்கம் கிளை தலைவர், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு - சென்னை) தெரிவித்துள்ளார்.

# ஆவண எழுத்தர்களுக்கு வழங்கப்படும் உரிமங்கள்!

**ஆவண எழுத்தர்களுக்கு மூன்று வகையாக உரிமங்கள் வழங் கப்படுகிறது.**

**1. மாநில உரிமம் :** (A - Licence)

தமிழ்நாடு முழுவதிலும் எந்த மாவட்ட பதிவகத்திலும் அல்லது எந்த சார்பதிவாளர் அலுவலகத்திலும் இந்த உரிமம் பெற்றவர்கள் எழுதும் ஆவணங்கள் பதிவுக்கு அனுமதிக்கப் படும்.

**2. மாவட்ட உரிமம் :** (B - License)

எந்த பதிவு மாவட்டத்தில் உரிமம் பெறுகிறாரோ அந்த பதிவு மாவட்டம் முழுவதிலும் இந்த உரிமம் பெற்றவர் எழுதும் ஆவணங்கள் பதிவுக்கு அனுமதிக்கப்படும்.

**3. சார்பதிவக உரிமம் :** (C - Licence)

எந்த சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உரிமம் பெறுகிறாரோ அந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டும் இந்த உரிமம் பெற்றவர் எழுதும் ஆவணங்கள் பதிவுக்கு அனுமதிக் கப்படும்.



**யாரெல்லாம் ஆவணங்கள் எழுத உரிமம் பெற தேவையில்லை :**

1. ஆவணத்தை எழுதி கொடுப்பவரால் எழுதப்படும் ஆவணங்கள்.

2. Official Assignee or Official Receiver

3. மத்திய மற்றும் மாநில அரசுகளினால் எழுதி கொடுக்கப்படும் ஆவணங்கள், உள் ளாட்சி நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் அல்லது வங்கிகள், வெளிநாட்டு தூதரகங்கள் ஆகியோர்களால் எழுதி கொடுக்கப்படும் ஆவணங்கள்

4. வழக்கறிஞர்கள்.

**உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:**

1. ஆவண எழுத்தருக்கான பதிவேடு, ரசீது புத்தகம் ஆகியவற்றை பராமரிக்க வேண்டும்.

2. பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் பதிவு அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட எவருக்காகவும் எவ்வித தொகையை கேட்பதோ அல்லது பெறுவதோ கூடாது. பதிவு அலுவலகத்துக்கு சம்மந்தப்பட்ட எந்தப் பணியாளர்களுடனும் சேர்ந்து தவறான செயல்களில் ஈடுபடக் கூடாது.

3. கணக்குகளை அன்றாடம் முறையாக எழுதி வர வேண்டும். பொதுமக்களிடத்தில் வாங்கும் பணத்திற்கு உண்மையான மற்றும் சரியான கணக்கு எழுத வேண்டும். இந்த பதிவேடுகளை துறை அதிகாரிகள் கோரும் போது ஆய்வுக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

4. ஆவணங்கள் அழகாக வும், தவறின்றியும், புரியாத வார்த்தைகளை பயன்படுத்தாமலும் எழுத வேண்டும். ஆவணங்கள் எழுதுவது குறித்து பதிவுத்துறை தலைவர் அவர்களால் அவ்வப் போது பிறப்பிக் கப்படும் ஆணைகளை பின்பற்ற வேண்டும்.

5. கைமாறு தொகையை குறைக்காமலும் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தாமலும் ஆவணம் எழுத வேண்டும்.

6. இடைத்தரகராக செயல்படக்கூடாது.

7. ஆவணப் பதிவின்போது இன்னாரென்று நிரூபிக்கும் சாட்சியாக செயல்படக்கூடாது.

8. சான்றிட்ட நகல் அல்லது வில்லங்க சான்று கோரி மனுதாக்கல் செய்யக்கூடாது.

9. ஆவணத்தையோ, வில்லங்க சான்றிதழையோ அல்லது சான்றிட்ட நகலையோ பதிவு அலுவலகத்திலிருந்து திரும்ப பெற்று செல்லக்கூடாது.

10. ஆவணம் எழுத அலுவலக வராண்டாவையோ அல்லது பொதுமக்கள் அமரும் இடத்தையோ பயன்படுத்தக்கூடாது.

11. பதிவு அலுவலகத்தில் பணிபுரியும் எவருடனும் எந்தவித உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது.

12. ஆவணத்தில் தேதி, கைமாறு தொகை, சர்வே எண், விஸ்தீரணம், பாதிக்கப்பட்ட விஸ்தீரணம் மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றை எண்ணாலும், எழுத்தாலும் எழுத வேண்டும்.

13. பதிவு அலுவலர் அழைத்தாலன்றி அலுவலகத்திற்குள் செல்லக்கூடாது.

14. ஆவண எழுத்தர்கள் கட்சிக்காரர்களிடம் சொத்து மற்றும் ஆவண விபரங்களை கோரிப் பெற்று கட்டிடங்களை நேரில் சென்று அளந்து அரசுக்கு வருவாய் இழப்பு ஏதும் ஏற்படாத வகையில் ஆவணங்களை எழுத வேண்டும். ( பதிவுத்துறை தலைவர் கடித எண் 51164/15/94, தேதி 21.12.1994)

15. ஆவண எழுத்தர் உரிமங்களை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும்.

16. கிரையம், பரிவர்த்தனை, செட்டில்மெண்ட் மற்றும் தான பத்திரங்களின் மதிப்பு ரூ. 10000/ வரை இருப்பின் கட்டணமாக ரூ. 25 பெற்றுக் கொள்ள வேண்டும்.

ரூ. 10000/ க்கு மேல் ரூ. 50000/ வரையிலான ஆவணங்களுக்கு ரூ. 50

ரூ. 50000/ க்கு மேல் ரூ. 100000/ வரையிலான ஆவணங்களுக்கு ரூ. 75

**ஒப்புதல் ஆவணம், ரசீது ஆவணம், ரத்து ஆவணம், அதிகார ஆவணம், மணமுறிவு ஆவணம், புரோநோட், உடன்படிக்கை, அவார்டு ஆகியவைக்கு ரூ. 25 பெற்று கொள்ள வேண்டும்.**

ரூ. 100000/ க்கு மேல் ரூ. 2 லட்சம் வரையிலான ஆவணங்களுக்கு ரூ. 100

ரூ. 2 லட்சத்துக்கு மேல் ரூ. 5 லட்சம் வரையிலான ஆவணங்களுக்கு ரூ. 150

ரூ. 5 லட்சத்துக்கு மேல் ரூ. 200 கட்டணமாக வசூலித்துக் கொள்ள வேண்டும். வாங்கும் கட்டணத்திற்கு ரசீது வழங்க வேண்டும். அதில் கட்சிக்காரரின் கையொப்பம் பெற வேண்டும்.

வைப்பு ஆவணம், குத்தகை ஆவணம், அடமான ஆவணம், விடுதலை ஆவணம், கூட்டு வணிக ஆவணம், ட்ரஸ்ட் ஆவணம் ஆகியவைக்கு கட்டணமாக ரூ. 50 பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்புதல் ஆவணம், ரசீது ஆவணம், ரத்து ஆவணம், அதிகார ஆவணம், மணமுறிவு ஆவணம், புரோநோட், உடன்படிக்கை, அவார்டு ஆகியவைக்கு ரூ. 25 பெற்று கொள்ள வேண்டும்.

கட்டிட ஆவணங்களுக்கு, வீட்டை அளந்து இணைப்பு 1ஏ தயாரிக்க ஒவ்வொரு 1ஏ விற்கும் ரூ. 50 பெற்று கொள்ள வேண்டும்.

23.12.2004 ஆம் தேதியிட்ட கடிதத்தின்படி ஆவண எழுத்தர்கள் கட்டண விபரம் தொடர்பான விளம்பர பலகையை வைக்க வேண்டும்.

இந்த விதிமுறைகளை மீறி நடந்து கொள்ளும் ஆவண எழுத்தர்களின் உரிமத்தை ரத்து செய்ய உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

# வங்கியால் ஏற்படும் பிரச்னைகளுக்கு வாடிக்கையாளர்கள் புகார் அளிப்பது எப்படி?

## எங்கு புகார் அளிக்கலாம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்

**வங்கிப் பரிவர்த்தனையின்போது வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்கவே வங்கிக் குறை தீர்ப்பாணையம் உள்ளது.**

இதன் மூலம் அனைத்து வங்கிகளின் வாடிக்கையாளர்களும் தங்களின் தீர்க்க முடியாத பிரச்னைகளுக்கு எந்தவிதச் செலவும் இன்றி தீர்வுகாணலாம்.

குறை தீர்ப்பாணையம் என்பது, பட்டிய லிடப்பட்ட வணிக வங்கிகள், வட்டார கிராமப்புற வங்கிகள் பட்டியலிடப்பட்ட முதன்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள் சம்பந்தப்பட்ட புகார்களுக்கு தீர்வு வழங்கக் கூடிய ஓர் அமைப்பு.

இந்த சேவையில் அவ்வப்போது சில பிரச்னைகளும் எழலாம். அவை...

சேமிப்புக்கணக்கின் செயல்பாடு உறுதி அளிக்கப்பட்ட பல்வேறு சேவைகள் அளிப்பதில் குறைபாடு.

கணக்கு தொடங்க/முடிக்க, தாமதித்தல் அல்லது மறுத்தல்.

தகுந்த காரணமின்றி கடன் அனுமதி பட்டு வாடா செய்வதைத் தாமதித்தல் அல்லது மறுத்தல்.

காசோலைகள், வரைவோலைகள் மூலம் பணம் அளித்தல் தாமதம் அல்லது பணம் சேகரித்தலில் தாமதம்.

முன்னறிவிப்பின்றி கட்டணம் வசூலித்தல்.

வைப்புகள் மீதான இதர வட்டிவிகிதம் குறித்த இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு தலைக் கடைப்பிடிக்காதிருத்தல்.

ஏடிஎம் அல்லது டெபிட் அல்லது கிரெடிட் கார்டு செயல்பாடுகளில் இந்திய ரிசர்வ் பேங்க் அறிவுறுத்தலுக்கேற்ப செயல்படாமல் இருத்தல்.

ஓய்வூதியம் அளிக்காதிருத்தல் அல்லது தாமதித்தல் போன்ற பிரச்னைகளை, குறை தீர்ப்பு ஆணையரிடம் முறையிடலாம்.

குறிப்பிட்ட வங்கி, புகார் தாரரின் முறையீட்டைப் பெற்றுக்கொண்ட ஒரு மாதத்துக்குள் பதில் தராவிட்டாலோ, புகாரை மறுத்தாலோ, திருப்திகரமாகப் பதில் அளிக்காவிட்டாலோ, குறைதீர்ப்பாணையத் திடம் தன் புகாரை வாடிக்கையாளர் சமர்ப்பிக் கலாம்.



அதற்கு முன்பாக, புகாரில் குறிப்பிடப் படும் வங்கியிடமிருந்தே நேரடியாக எழுத்து வடிவிலான (வேண்டுகோள் மூலம் முயற்சித்து திருப்திகரமான) ஒரு தீர்வைப் பெற முயல்வது நல்லது. ஆயினும் புகாருக்குரிய நிகழ்வுக்கு ஒரு வருடத்துக்குள்ளாக அந்தப் புகார் அளிக்கப்பட வேண்டும்.

புகார் அளிப்பவரின் பெயர், முகவரி மற்றும் எந்த வங்கியின் மீது புகார் தரப்படுகிறதோ அந்தக் கிளையின் பெயர், முகவரி, புகாருக்கு உள்ளடக்கிய உண்மை விவரங்கள், ஏதேனும் ஆவணச்சான்றுகள் இருப்பின் அவையும், அந்த நிகழ்வினால் ஏற்பட்ட நஷ்டத்தின் அளவு மற்றும் தன்மை, குறை தீர்ப்பாணையத்திடமிருந்து எதிர்பார்க்கும் தீர்வு இவற்றுடன் ஓர் உறுதிமொழியும் அளிக்கப்பட வேண்டும். மேற்கொண்டு செயல்படவேண்டிய சில கட்டளைகளை மேற்கொள்வேன் என்பதற்கான உறுதிமொழியே அது. இவை அனைத்தையும் குறை தீர்ப்பாணையத்துக்கு அளிக்கவேண்டும்.

உங்கள் புகார்களை, தபால், மின்னஞ்சல் அல்லது ஆன்லைன் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

**வங்கிக் குறை தீர்ப்பாளர் அலுவலகம்**
**இந்திய ரிசர்வ் பேங்க்**
**இரண்டாவது தளம்,**
**16, ராஜாஜி சாலை, கோட்டை சரிவு**
**சென்னை 600 001.**
**மின்னஞ்சல்:** bocchennai@rbi.org.in

ஒரு வழக்கில், நீதிமன்றத்தில், நடுவர் மன்றத்தில் அல்லது ஏதேனும் ஒரு மன்றத்தில் நிலுவையிலிருக்கும் புகார்கள் அல்லது வக்கீல்கள் மூலமாகச் சமர்ப்பிக்கப்படும் புகார்களை குறை தீர்ப்பாளர் தீர்வு செய்யமாட்டார். அதே சமயம், ஒரு புகாரை தொடர்புடைய வங்கிக்கு அனுப்பி, அந்த வங்கி புகார் பெற்று ஒரு மாதகால அளவுக்குமேல் வங்கியிடமிருந்து எந்தப் பதிலும் பெறாதிருந்தால் அல்லது அந்த வங்கி புகாரை நிராகரித்திருந்தால் அல்லது அதன் பதிலில் நீங்கள் திருப்தியடையாமலிருந்தால் மட்டுமே புகார் அளிக்கப்பட வேண்டும்.


அமைப்பின் உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் CC TV கேமரா பொருத்தப்படும்.



**SIGMAA TECH SOLUTIONS**
Sigmaa Creating Sustainable Ambience

**G.Arunagiri**
Prop



**We Narrow Down BMS & IBMS**

- CCTV/Security Cameras
- Door Access Control
- Fire Alarm/Burglar Alarm Systems
- Fire Extinguisher/Fire Sprinkler
- Fire Hydrant
- Networking System
- PAS System / Solar System
- GPS Vehicle Traking System

# 107, Lake View Garden, Seeyathaman Koil Street,
Korattur (North), Chennai - 600 076.
**Mobile : 98410 50681 / 98412 71710**
Email: sigmatechsolutions.2007@gmail.com
Website:www.sigmaatechsolutions.com

# ²fè,è† ì í ˆ¬î ó˜ ¶ ªêŒò «õ‡ ´‹!

**தமிழ்நாட்டில் கடந்த 7 மாதங்களில் மட்டும் தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக்கட்டணமாக ரூ.3421 கோடி வசூலிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.**

இது கடந்த சில ஆண்டுகளில் வசூலிக்கப் பட்ட சுங்கக்கட்டணத்தை விட மிக அதிகம் என்பதைக் கடந்து, கடந்த காலங்களில் சுங்கக் கட்டண வசூல் கணக்கில் காட்டப்படாமல் மறைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஐயத்தை உறுதி செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ் சாலைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள 47 சுங்கச்சாவடிகளில் வசூலிக்கப்பட்ட சுங்கக்கட்டணம் குறித்த விவரங்களை மத்திய நெடுஞ்சாலைத் துறை வெளியிட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான 7 மாதங்களில் தமிழகத்தில் உள்ள சுங்கச் சாவடிகளில் ரூ.3421 கோடி வசூலிக்கப்பட்டிருப்பதாக மத்திய நெடுஞ் சாலைகள் துறை அமைச்சர் நிதின்கட்கரி தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு முழுவதும் வசூலிக்கப்பட்ட சுங்கக்கட்டணமான ரூ. 3,875 கோடியில் இது 90 விழுக்காட்டுக்கும் அதிகமாகும். கடந்த ஐந்து ஆண்டுகளாகவே தமிழ்நாட்டில் சுங்கக்கட்டண வசூல் உயராமல் நிலையாக இருந்த நிலையில், இந்த உயர்வு வியக்கத்தக்கது ஆகும்.

தேசிய நெடுஞ்சாலைகளின் சுங்கக் கட்டண உயர்வு, தமிழ்நாட்டில், கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகரித்திருப்பதற்குக் காரணம் போக்குவரத்து அதிகரித்ததோ, சுங்கக்கட்டணம் உயர்த்தப் பட்டதோ அல்ல. மாறாக, சுங்கக்கட்டண சுரண்டல் கிட்டத்தட்ட தடுக்கப்பட்டிருப்பது தான். 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி வரை சுங்கக்கட்டணம் பணமாக வசூலிக்கப்பட்டு வந்தது. அதில் பெரும்பகுதி



கணக்கில் காட்டப்படாமல் மறைக்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த பிப்ரவரி 15ஆம் தேதி முதல் ஃபாஸ்டாக் (FasTag) முறையில் கட்டணம் வசூலிக்கப்படுவதால், அதை மறைக்க முடியாது. அதனால் தான் நடப்பாண்டில் சுங்கக்கட்டண வசூல் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

2020-21 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டின் சுங்கக்கட்டண வசூல் இதே அளவில் நீடித்தால் 51% அதிகமாக இருக்கும். கடந்த நிதியாண்டிலும் ஒன்றரை மாதங்கள் பாஸ்டாக் முறையில் கட்டணம் வசூலிக்கப்பட்டதால் அதை ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ள முடியாது. 2019-20 ஆம் ஆண்டு கட்டணத்துடன் ஒப்பிட்டால், நடப்பாண்டின் கட்டண வசூல் 72% அதிகமாக இருக்கும். இதன் பொருள் கடந்த ஆண்டில் சுமார் 51 விழுக்காடும், அதற்கு முந்தைய ஆண்டில் சுமார் 72 விழுக்காடும் சுங்கக் கட்டணம் சுரண்டப்பட்டிருக்கிறது என்பது தான். இதை உறுதி செய்வதற்கு புள்ளிவிவரங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 47 சுங்கச்சாவடிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் வாகனப் போக்குவரத்து அதிகரித்து வருகிறது. அதேபோல், ஆண்டுக்கு ஆண்டு சுங்கக்கட்டணம் சராசரியாக 10% வரை உயர்த்தப்படுகிறது. அதன்படி சுங்கக் கட்டண வசூல் ஆண்டுக்கு குறைந்தது 15% அதிகரிக்க வேண்டும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் சுங்கக்கட்டண வசூல் குறிப்பிடத்தக்க அளவில் மாறாமல், 2016-17இல் ரூ.3,320 கோடி, 2017-18இல் ரூ.3,894 கோடி, 201819இல் ரூ.3,262 கோடி, 201920 இல் ரூ.3392 கோடி, 2020-21இல் ரூ.3,875 கோடி என்ற அளவில் நிலையாகவே உள்ளது. இதற்குக் காரணம் சுங்கக்கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள், குறிப்பிட்ட விழுக்காடு கட்டணத்தை கணக்கில் காட்டாமல் மறைத்து விடுவது தான்.




தனியாரால் அமைக்கப்பட்ட சாலைகளில் சுங்கக்கட்டணம் வசூலிப்பதற்காக தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் வகுத்துள்ள விதிகளின்படி, ஒரு நெடுஞ்சாலையை அமைப்பதற்காக செய்யப்பட்ட முதலீடு எடுக்கப்பட்ட பிறகு பராமரிப்புக்காக 40% கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். உண்மையான கணக்கு காட்டப்பட்டால், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுங்கசாலைகளுக்கும் செய்யப்பட்ட முதலீடு எடுக்கப்பட்டிருக்கும். அதன்பிறகு 40% கட்டணத்தை மட்டுமே வசூலிக்க முடியும் என்பதால், அதை தவிர்த்து, இன்னும் பல ஆண்டுகளுக்கு முழுக் கட்டணத்தையும் வசூலிக்க வேண்டும் என்பதற்காகத் தான் சாலைகளை அமைத்த நிறுவனங்கள் முழுமையான கணக்கை காட்டுவதில்லை எனக் கூறப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக ரூ.732 கோடி மட்டுமே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் அதைவிட ரூ.243 கோடி அதிகமாக ரூ.975 கோடி வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் ஒவ்வொரு சாலைக்கும் ஒரு கணக்கு உள்ளது. இது இயல்பானது அல்ல. கடந்த ஆண்டுகளை விட நடப்பாண்டில் சுங்கக்கட்டண வசூல் அதிகரித்ததற்கான காரணம் என்ன? கடந்த ஆண்டுகளில் சுங்கக்கட்டண வசூல் மறைக்கப்பட்டதா? என்பன போன்ற வினாக்களுக்கு அதிகாரப்பூர்வ விடை காணும் வகையில் சுங்கக்கட்டண வசூல் குறித்து விசாரணைக்கு ஆணையிட வேண்டும். விசாரணை முடிவடையும் வரை, 10 ஆண்டுகளுக்கும் மேலாக சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டும் வரும் சாலைகளில் சுங்கக்கட்டணம் வசூலிக்கத் தடை விதிக்க வேண்டும்.

# வீட்டில் மின் பாதுகாப்பு!

**வழி முறைகள் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

i) எர்த் லீக்கேஜ் சர்குட் பிரேக்கர் ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியம்; செலவு பாராமல் வைக்க வேண்டும்.

ii)வீட்டிலுள்ள வீனாய் போயுள்ள, பழைய சுவிச்சுகளை அவசியம் மாற்றிவிட வேண்டும். தரமான சுவிச்களை வாங்கிப் பொருத்த வேண்டும்.

iii)தண்ணீர் ஏற்ற வைத்துள்ள மோட்டர் சுவிச் போர்ட்,வாஷிங் மிஷின், ஃப்ரிட்ஜ் கீழே ரப்பர் மேட் போட்டுக் கொள்வது பாது காப் பானது.

iv)எந்த சுவிட்சை இயக்கும் போதும் இடது கையை பின்புறத்தில் கட்டிக் கொண்டு, வலது கை சுட்டு விரலால் மட்டுமே இயக்க வேண்டும், இதயம் இடது புறத்தில் உள்ளதால்.

v)பாத் ரூம் சுவிச் போர்டின் மேல் ஒரு பழைய டூத் பிரஷ் வைத்துக் கொண்டு,அதனால் சுவிட்சைப் போடுவதே பாதுகாப்பானது.

vi)மழைக் காலம் வாட்டர் ஹீட்டர் அடிக்கடி பயன்படுத்த வேண்டியிருப்பதால், அதன் விஷயத்தில் மிகவும் சாக்கிரதையாக இருக்க வேண்டும்.மும்பையில்,

ஒரு நடிகை ஹீட்டர் நீரில் குளிக்கும் போது, மின் ஷாக் அடித்து இறந்து போனது அறிந்திருப்போம்.

தண்ணீர் இல்லாததால்,ஹீட்டர் எலி மெண்ட் உருகி, மின்சாரம் பாய்ந்து,அந்த நடிகை இறந்து போயிருக்கிறார்.

ஹீட்டருக்கு கொடுக்க கூடிய இன்லெட், அவுட்லெட் ஏதும் மாறவே கூடாது.

எதிலும் கண்ட்ரோல் வால்வ் வைத்துவிடக் கூடாது. அவுட்லெட் ,ஹாட் வாட்டர் டேப் வழியாக தண்ணீர் வருவதை உறுதி செய்து கொண்ட பின்னரே, ஹீட்டர் சுவிட்சை ஆன் பண்ண வேண்டும்.

ELCB இம்மாதிரி சமயங்களில் நம்மைக் காப்பாற்றும்.

ஹீட்டர் சுவிச்சை டவல்/துடைக்கும் துண்டை வைத்து ஆஃப் செய்தால் ஈரக்கை யோடு சுவிச்சை தொடுவதிலிருந்து தப்பித்து விடலாம்.

vii)பொதுவாக வாட்டர் ஹீட்டருக்கு சாதாரண சுவிட்ச் தான் வைத்திருப்பார்கள்.

அதற்குப்பதிலாக எம்சிபி வைத்தால், ஹீட்ட ரில் ஏதாவது ஷார்ட் சர்குட் ஆகும் போது ட்ரிப் ஆகி நம்மை காக்கும். எப்போதும், சுடு நீர் தயார் பண்ணிவிட்டு, விசிஙி ஐ ட்ரிப் பண்ணிவிட்டு குளிக்கப்போவதே நல்லது.இதே போல, வெட் கிரைண்டருக்கும் எம்சிபி பொருத்திக்கொள்வதே நல்லது.

viii)ஈர மின் சாதனங்களான வாஷிங் மெஷின், கிரைண்டர் போன்றவற்றைக் கையாளும் போது,சுவிச்சை ஆஃப் பண்ணாமல் ஈரத் துணிகளை எடுப்பதோ,மாவை அள்ளு வதோ கூடவே கூடாது.

ix) இவ்வளவு கவனமாக இருந்தும், ஆக்சிடெண்டலாக ஷாக் அடிக்க நேர்ந்தால், நேர்ந்து விட்டால், அருகிலுள்ளவர் ஒரு கம்பால் அல்லது துடைப்பக் கட்டையால் பாதிக்கப்பட்டவரின் கையை அடிக்க வேண்டுமே அன்றி, பாதிக்கப்பட்டவரை நேரடியாக தொடவேக் கூடாது.

கிரைண்டரில் ஷாக் அடித்த மருமகளையும், பேத்தியையும் காப்பாத்த அவர்களை தொட்டு இழுத்து ,இறந்து போன மாமியாரையும், பல வருடங்களுக்கு முன்பு, திருநெல்வேலி அருகே,இன்சுலேஷன் பாதிப்படைந்த சர்வீஸ் லைன் மேல் பட்டு ,கீழே வீழ்ந்து கிடந்த டிவி ஆண்டெனாவைத் தொட்ட ஒரு மனைவியைக் காப்பாற்றப் போன கணவன் தொடர்ந்து

தொட்ட மகன், மகள், உறவினர்களென்று கிட்டத்தட்ட ஏழு பேர் ஒரே நேரத்தில் இறந்து போனதையும் மறக்கவே கூடாது.

இம்மாதிரியான நேரங்களில் உணர்ச்சி வசப்படாமல்,அறிவு பூர்வமாக செயல்பட வேண்டும்.

செருப்பு இதற்கு நல்ல ஸேஃப்டி டூல்.

அதனால், அடித்துக் கூட காப்பாற்றலாம்.

வீடென்றால் தொடப்பக்கட்டை!

வெளியே என்றால் செருப்பு!!!

எளிதாகக் கிடைக்கும் என்பதற்காகத் தான்!

வேறொன்றுமில்லை!!!

(ஷாக் அடித்தால் தான்!!

சும்மா இருக்கும் போது அடித்து வம்பிழுக்க வேண்டாம்).

தண்ணீரில் வீழ்ந்தவரைக் காப்பாற்றப் போய் தானும் உயிர் விடற மாதிரி ஆகிவிடக் கூடாதல்லவா?

x) கைக் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு மின்சாதனங்களைத் தொடவே கூடாது.

குழந்தைகளுக்கு எட்டும்படியாக சுவிச் பாக்ஸ் வைக்கக் கூடாது.

xi) சிங்கிள் பேஸ் சப்ளை வைத்திருப்போர், இரு முனை அயன்கிளாட் சுவிச்சும், 3 பேஸ் சப்ளை வைத்திருப்பவர்கள் 4 முனை சுவிச்சும் வைத்திருக்க வேண்டும்.

நியூட்ரலில் லின்க் போட்டிருக்க வேண்டும்; ஃப்யூஸ் போடக் கூடாது. நியூட்ரல் கிரவுண்டிங்கை சரியாகப் பராமரிக்க வேண்டும்.

xii) நமது வீட்டில் பொருத்தியுள்ள UPS க்கு மின்வாரிய நியூட்ரலைத்தான் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம். மின்சாரம் இல்லாத போது நமது UPS மூலம் நமது மின் சாதனங்கள் இயங்கும்போது,அவையேதும் ஃபால்ட்டானால், நியூட்ரல்/ எர்த் வழியாக மின்கம்பத்திற்கு மின்சாரம் வந்து சில மின் ஊழியர்கள் இறந் துள்ளனர்.

ஆகவே நாம் UPS ல் உள்ள நியூட்ரலை பயன்படுத்திக்கொண்டால் மின்கம்பத்திற்கு மின்சாரம் வராமல் அல்லது மின்சாரம் இல்லாத போது மெயின் சுவிட்சை ஆஃப் செய்து வைத்து மின்வாரியத்திற்கு உதவி உயிர் பலியினை தடுப்பது நமது கடமை.

UPS சப்ளைக்கு காமன் நியூட்ரலை பயன்படுத்துவது தான் பொதுவாகப் புழக்கத்தில் இருக்கிறது.

UPS சப்ளைக்கு தனி நியூட்ரலை பயன்படுத்த வேண்டுமாயின்,

UPS ஃபீடிங் சர்கூட்டின் நியூட்ரலையும்,

பேஸ் மாதிரியே தனியாகப் பிரித்து, UPS இன் பேஸ், நியூட்ரலுக்குமாகத் தனியாக ஒரு காண்டேக்டர் மூலமாக UPS சர்கூட்டின் சப்ளையை பராமரிப்போமானால், சர்கூட்டின் ஃபேனோ,லைட்டோ பழுதடைந்தால், UPSஇன் பேஸ், வாரியத்தின் நியூட்ரலுக்கு ரிட்டர்ன் சப்ளை போகாது.

இது எளிதான காரியமல்ல. அதற்குப்பதில், RCCB இணைத் தோமா னால், யுபிஎஸ் சப்ளை,வாரியத்தின் லைனுக்கு பேக் ஃபீடாகி விபத்து நேர்வதை தடுக்கலாம்.இது கொஞ்சம் மெனக்கெட்டு செய்யனும்.

xiii) முதலில் சொன்னதையே இறுதியிலும் சொல்கிறேன்,ணிலிசிஙி ஐ அவசியம் வாங்கிப் பொருத்துங்கள்.

தமிழ்நாட்டில் சராசரியாக 342 மிமீ மழை பெய்ய வேண்டும். ஆனால் ஏற்கனவே அந்த சராசரி அளவை தமிழ்நாடு கடந்துவிட்டது. தமிழ்நாட்டில் தற்போது வரை 583 மிமீ மழை பெய்துள்ளது.

கடந்த 1950ல் இருந்து 70 வருடங்களில் வெறும் 10 சீசனில் மட்டுமேதான் இந்த அளவிற்கு மழை பெய்துள்ளது. இதற்கு முன் 10 சீசனில் மட்டுமே நடந்த அதிசயம் தமிழ்நாட்டில் இந்த முறை மீண்டும் நடக்கிறது. எனவே,வீட்டின் அனைத்துச் சுவர்களும் ஓதம் காக்கும். குறிப்பாக, மெயின் சுவிட்ச் போர்ட் இருக்குமிடம் சொதசொதன்னு இருக்க அதிக வாய்ப்புள்ளது.

ஈரம் மின்சாரத்திற்கு நண்பன்! எனவே ,நாம்தான், இந்த கடும் மழைக் காலத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

# உணவு பாதுகாப்பு பயிற்சிப் பட்டறை!






















தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் சார்பில் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா (26.03.2022) அன்று சென்னை எழும்பூரில் உள்ள மேயர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் மாலை 05.30 மணியளவில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் நீதிபதி உயர்திரு. துரை ஜெயச்சந்திரன், சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை பெருநகர காவல் துணை ஆணையாளர் டாக்டர் K. கார்த்திகேயன் IPS., தமிழ்நாடு உணவு பாதுகாப்பு தறையின் நியமன அலுவலர் டாக்டர் P. சத்தீஷ் குமார், தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறையின் உதவி ஆணையாளர் திரு. R. நெஹிமியா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை செய்தனர்.

முன்னதாக காலை 09.30 மணியளவில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 200 நுகர்வோர் ஆர்வலர்களை தேர்வு செய்து தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் மாலை 5.30 மணிவரை இத்துறையின் வல்லுனர்களை கொண்டு உணவு பாதுகாப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு, சிறப்பு விருந்தினர்கள் மூலம் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# காஞ்சிபுரம் மாவட்ட செய்திகள்



தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் மாநில தலைவர் ஸ்ரீக்ஷீ.சி.பால் பர்ணபாஸ் அவர்களின் ஆலோசனையின்படி காஞ்சிபுரம்/செங்கல்பட்டு மாவட்டம் நுகர்வோர் பாதுகாப்பு மையம் ,மாவட்ட மக்கள் நல சங்கம்,அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகம் சார்பில் காயரம்பேடு கூட்ரோடு பகுதியில் உள்ள ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபத்தில் , மாவட்டத் தலைவர் Dr.D.C.ஜான் இளங்கோவன் அவர்கள் தலைமையில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு கலந்துரையாடல் வளர்ச்சி மற்றும் மேம்பாடுகள் சிறப்பு அலோசனை கூட்டம்




நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், வட்டம், ஒன்றிய, கிளை, தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# உலக மகளிர் தினம் -2022




தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகம் சார்பில் 06.03.2022 அன்று சென்னை எழும்பூரில் நுகர்வோர் பாதுகாப்பு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்திற்கு தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை மாவட்ட செய்திகள்






உலக நுகர்வோர் தின விழாவை முன்னிட்டு 15.03.2022 அன்று சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. சங்கர் ஜிவால் IPS அவர்களை சந்தித்து தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் **செ. பால்பர்ணபாஸ்**
**தலைவர்**
**தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு**

தமிழக காவல் துறையில் டி.ஜி.பி அந்தஸ்து பதவி உயர்வு பெற்ற சென்னை தாம்பரம் காவல் ஆணையாளர், மதிப்பும் மரியாதைக்குரிய டாக்டர் மு.இரவி, இ.கா.ப அவர்களுக்கு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

டாக்டர் **செ. பால்பர்ணபாஸ்**
**தலைவர்**
**தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு**

# சொத்து வரி உயர்வு மக்களை மிகவும் பாதிக்கும்!

## தமிழக அரசு திரும்ப பெற தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு வலியுறுத்தல்!

**தமிழகத்தில் சொத்து வரி உயர்வு நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கும். ஆகவே, தமிழக அரசு திரும்ப பெற வேண்டும் என தமிழக முதல் வருக்கு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது!**

தமிழகத்தில் ஒருபுறம் நுகர்வோருக்கான எரிவாயு, வாகன எரிபொருள், சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கிடுகிடு வென உயர்ந்து கொண்டே போகும் சூழலில் மற்றொரு புறம் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு விலை, சுங்கக்கட்டணம் உள்ளிட் டவையும், தொழிற்சாலைகளுக்கான உற்பத்தி மூலப்பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்து கொண்டே சென்று ஏழை, எளிய, நடுத்தர மக்களையும், வணிகர்களையும் கடுமையாக பாதித்துள்ளது.

இந்நிலையில் ஒன்றிய அரசு போல் தமிழக அரசும் தன் பங்கிற்கான சொத்துவரியை *25% முதல் 150% வரை* சொத்து வரியை உயர்த்தி பொதுமக்கள் தலையில் மிகப்பெரிய பாரத்தை சுமத்தியிருப்பதை தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு தெரிவித்துக் கொள் கிறது. ஏற்கனவே கடந்த அதிமுக ஆட்சியில் சொத்துவரி உயர்த்தப்பட்ட போது அதனை கடுமையாக எதிர்த்த திமுக, தற்போது அதே தவறை செய்திருப்பதை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது

ஏனெனில் இந்த சொத்து வரி உயர்வின் காரணமாக வீட்டு வாடகை, கடை வாடகை உடனடியாக கடுமையாக உயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கொரோனா நோய் பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு தொழில்களும் கடுமையாக நலிவடைந்து போனதால் வணிகர்கள் தொழில்களை இழக்க, பொதுமக்கள் வேலையிழந்து, அதன் காரணமாக தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருவது தொடர்கதையாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் தற்போதைய பலமடங்கு சொத்து வரி உயர்வினால் வீடு, கடை வாடகையும் பலமடங்காக உயரும் போது அது பொதுமக்களையும், வணிகர்களையும் இன்னும் கடுமையாகவே பாதிக்கும் அதனால் மிகப்பெரிய அளவில் பொருளாதார நெருக்கடிக்கு பொதுமக்கள் உள்ளாக நேரிடும்.

வீடுகள் மற்றும் வணிக தேவைகளுக்காக வாடகைக்கு விடுவோர் தங்கள் இடங்களை தங்களது இஷ்டத்துக்கு வாடகைகளை தாங்களாகவே நியாமற்ற வகையில் உயர்த்திக் கொள்வது என்பதை வழக்கமாக வீட்டு உரிமையாளர்கள் கொண்டு உள்ளனர், இதனால் வாடகைக்கு குடியிருப்போர் தொடர்ந்து பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

வீட்டு வாடகை உயர்வின் கொடுமை பிரச்னை ஒரு புறம் இருக்க மறுபுறம் தற் பொழுது தமிழக அரசு 25 சதவீதத்தில் இருந்து 150 சதவீதம் வரை சொத்து வரியை உயர்த்தி இருக்கிறது இதை காரணம் காட்டி அனைத்து வாடகைகளும் உயர்த்தப்படும் அவல நிலை தற்பொழுது தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே வாடகை கட்டுப்பாட்டு சட்டங்கள் இருப்பினும் அதற்கு எந்த வீட்டு உரிமையாளரும் கட்டுப்படுவதில்லை அரசாங்கமும் அதை கண்டுகொள்வதில்லை.

வரி வசூல் என்பது மக்களை கஷ்டப் படுத் தாதா வகையில் வசூலிக்கப்பட வேண்டும்.

வீட்டு வாடகை மற்றும் வணிக இடங்களுக் கான வாடகை தொகையை தமிழக அரசே முறையாக நியாயமாக வரைமுறை படுத்தி அரசே வாடகை நிர்ணயம் செய்ய சட்டம் இயற்ற வேண்டும்.அதிக வாடகை வசூலிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஏற்கனவே பெட்ரோல் டீசல் தொடர் விலை உயர்வு மூலமாக பெரியளவில் பாதிக்கபட்டு தவிக்கும் மக்களின் மீது சொத்து வரி உயர்வு மறைமுகமாக ஏழை நடந்தர மக்களை பெரிதும் பாதிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை எனவே தமிழக அரசு சொத்து வரி உயர்த்துவதை உடனடியாக திரும்ப பெற வேண்டும்

அதோடு வீடு மற்றும் வணிக இடங்களுக்கான வாடகை வரையறையை முறையே நிர்ணயம் செய்து அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்றும் தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

# திருப்பூர் மாவட்ட செய்திகள்




14.3.2022 அன்று இந்தியா தரநிர்ணய அமைவனம். சார்பாக அதன் உயர் அதிகாரி அருள்சக்தி. ஏற்பாட்டில் திருப்பூர் மாவட்டத்தில் வெள்ளகோவில் தேசிய மகளிர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் விழா நடைபெற்றது மாநில மூத்த நுகர்வோர் ஆர்வலர் திருப்பூர் டாக்டர் சிந்து சுப்பிரமணியம் கலந்து கொண்டு நுகர்வோர்களின் உரிமைகள் கடமைகள் என்ற தலைப்பில் விளக்கமாக உரையாற்றினார்.







திருப்பூர் மாநகரில் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 24.3.2022 அன்று உலக நுகர்வோர் உரிமை தினம் விழா கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றது திருப்பூர் நுகர்வோர் ஆர்வலர் டாக்டர் சிந்து சுப்பிரமணியம் கலந்துகொண்டு நுகர்வோர்களின் உரிமைகள் கடமைகள் பற்றி பேசினார்கள் மற்றும் மாநகர காவல்துறை சார்பாக அட்டிஷனல் டெப்டி கமிஷனர் பிரேமா அவர்கள் கலந்துகொண்டு பெண்களின் பாதுகாப்பு பற்றி விரிவாக உரையாற்றினார் மற்றும் திருப்பூர் வடக்கு போக்குவரத்து அதிகாரி ஜெயா தேவராஜ் அவர்கள் போக்குவரத்து விதிகளும் மற்றும் உள்ள பிரச்சனைகளை தெளிவாக விளக்கினார்கள் இறுதியில் மாவட்ட அறிவொளி இயக்க தலைவர் விஜயகுமார் அவர்கள் சிறப்பாக பாடம் படிப்பது பற்றி விளக்கு உரையாற்றினர்.

# ஆன்லைன் வர்த்தகத்தில் அதிகரிக்கும் போலிப் பொருட்கள்!

**ஆன்லைன் வர்த்தகத்தில் போலிப் பொருட்கள் மூலம் வாடிக்கையாளர்கள் ஏமாற்றப்படுவது தொடர்கதையாகி வருகின்றது. எப்படி ஏமாற்றப்படுகின்றனர் மக்கள்? ஏமாறாமல் தவிர்ப்பது எப்படி?**

ஆன்லைன் வர்த்தகம் சமீப காலங்களில் வாடிக்கையாளர்களின் ஆதரவைப் பெருமளவில் இழந்துள்ளது. ஆன்லைன் வர்த்தகத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக, ஆகஸ்ட் 2016 ம் ஆண்டு முதல், மார்ச் 2019 வரையிலான காலகட்டத்தில் மட்டும் 8 ஆயிரத்து 373 புகார்கள் தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைனில் பதிவாகியிருக்கின்றன என்பதே இதன் சான்று. இதில் ஸ்னாப்டீல், அமேசான், பிளிப் கார்ட் போன்ற எந்த பிரபல ஆன்லைன் நிறுவனமும் விதிவிலக்காக இல்லை.

ஆன்லைன் வர்த்தகம் சந்தித்துவரும் மிகப் பெரிய சிக்கல் 'போலிப் பொருட்கள்.' அதாவது பிராண்டிங் பொருட்களைப் போலவே உருவாக்கப்பட்ட போலியான பொருட்கள். லாஜிக்கல் சர்வே என்ற ஆய்வு நிறுவனம் கடந்த 2019ஆம் ஆண்டில் ஆன்லைன் வாடிக்கையாளர்களிடம் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தியது. அதில் ஆன்லைனில் பொருட்களை வாங்குபவர்களில் 38 சதவிகிதம் பேர் போலியான பொருட்களைப் பெற்று ஏமார்ந்து உள்ளது கண்டறியப்பட்டது, அதாவது ஆன்லைனில் பொருட்களை வாங்குபவர்களில் மூன்றில் ஒருவர் போலியைத்தான் பெறுகின்றார் என்றது இந்த ஆய்வு.

கடந்த 2017ஆம் ஆண்டில் எகனாமிக்ஸ் டைம்ஸ் நடத்திய ஒரு ஆய்வில் பங்கேற்ற வாடிக்கையாளர்களில், 12 சதவிகிதம் பேர் ஸ்னாப் டீல் இணையதளம் மூலம் போலியான பொருளைப் பெற்று ஏமாந்ததாகவும் , 11 சதவிகிதம் பேர் அமேசான் தளத்தில் போலியான பொருளைப் பெற்றதாகவும், 6 சதவிகிதம் பேர் பிளிப்கார்ட் தளத்தில் போலியான பொருளைப் பெற்றதாகவும் கூறியதும் இங்கு நினைவில் கொள்ள வேண்டியது.

மேலும் அதே 2017ஆம் ஆண்டில் வெளியான ரெட்சீர் நிறுவனத்தின் ஆய்வு, இந்தியாவில் போலியான பொருட்களை வாடிக்கையாளர்கள் திருப்பி அனுப்புவதால் ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு 3.4 பில்லியன் டாலர்களாக மதிப்பிடப்பட்டது. இது 24 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இணையான தொகை ஆகும். ஆன்லைன் விற்பனைத் தளங்களில் அதிக தள்ளுபடிக்கு பொருட்களை வாங்குபவர்களே இது போன்ற மோசடிகளுக்கு பெரிதும் இலக்காகின்றனர். வாசனை திரவியங்கள் முதல் ஷூக்கள் வரை அனைத்துப் பொருட்களிலும் முன்னணி பிராண்டுகளின் போலிகள் இவர்களைக் குறிவைத்தே தயாரிக்கப் படுகின்றன. இந்த மோசடிகளால் ஏற்படும் பாதிப்பு களைத் தவிர்க்க, வாரண்டி உள்ள, ரிட்டர்ன் வசதி உள்ள பொருட்களை மட்டுமே வாங்குவது அவசியம். கேஷ் ஆன் டெலிவரியில் வாங்கினால் அது இன்னும் சிறந்தது. அதிக தள்ளுபடி உள்ள பொருட்களை வாங்கும் போது, அவற்றின் வேறு புகைப்படங் களைப் பார்த்து, ஒப்பிட்டு உண்மையான பொருளா என்று சரி பார்ப்பதும் அவசியம் என்கின்றனர் நிபுணர்கள்.

Source: newsj.tv

Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah,*Phd*

**Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram, Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )**
**Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993**
**E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai**

வடிவமைப்பு: வீ.ஜயம்பெருமாள்

# தமிழ்நாடு நுகர்வோர் மாத இதழின் வாசகர்களுக்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**P.ஜேம்ஸ்விக்டர்ராஜ்குமார்**
சட்ட ஆலோசகர்
97907 12304



**மேக்ஸ்வெல் எபனெட்டஸ் ராபர்ட்ஸ்**
மாநில துணைச் செயலாளர்
94442 23704



**சைதை D. ஆபிரகாம்**
மா.புரவலர் (ம) சைதை கிளைத் தலைவர்
86673 49935



**P. திருமாறன்**
வடசென்னை மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
95001 44554



**S.யோகேஷ்வரி நாயுடு**
தென் சென்னை மாவட்ட இணைச்செயலாளர்
மகளிர் மற்றும் குழந்தைகள் அணி
98331 26863



**S.சுபாஷினி**
மத்திய சென்னை மாவட்ட அமைப்பாளர்,
மகளிர் மற்றும் குழந்தைகள் அணி
99412 49377



**Dr. S.பாக்யலக்ஷ்மி**
மாநில புரவலர், அக்குபஞ்சர் மருத்துவம்
98406 41360



**ராமலஷ்மி ராம்குமார்**
வடசென்னை மாவட்ட து.செயலாளர்
87545 07035



**S.ராஜேந்திரன்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
91762 93525



**V.M.கனிசெல்வம்**
தென் சென்னை மாவட்டத் தலைவர்
மாநில நிர்வாக பொ.கு.உறுப்பினர்
98408 27182




**B. நிதிஷ்குமார்**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
மடிப்பாக்கம் கிளை இ.செயலாளர்
88255 53646



**H. அப்துல்லா செரீஃப்**
மடிப்பாக்கம் கிளை து.செயலாளர்
98846 76417



**S. ஜெகன்பாபு**
மாநில உதவிச் செயலாளர்,
திருவல்லிக்கேணி பகுதி தலைவர்
98842 37456



**M.செல்வக்குமார்**
சேப்பாக்கம் கிளைச் செயலாளர்
63698 13901



**A. ராமதாஸ்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
99419 87794



**P. நவநீதன்**
மாநில துணை அமைப்பாளர்
97911 02345

**பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்**

ADVT

TAMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118

# தமிழ்நாடு நுகர்விழி மாத இதழின் வாசகர்களுக்கு இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**M. சிவா**
கும்முடிப்பூண்டி கிளைத் தலைவர்
98949 36304



**V.பிரகாஷ்**
மாநில புரவலர் (ம)
தெ.செ.மா. செயலாளர்
96001 61667



**R.முத்துக்குமரன்**
தென் சென்னை மாவட்ட அமைப்பாளர்
99400 42423



**R.ஜெயலக்ஷ்மி**
மாநில அமைப்பாளர், மகளிர் (ம)
குழந்தைகள் அணி
98842 94104



**K.ராஜலிங்கம்**
மாவட்ட து.செயலாளர்
95512 52964



**N.சங்கர்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
98410 06356



**V.சுவாமிநாதன்**
மாநில புரவலர்
86081 49414



**H.V. சீத்தாராமன்**
வட சென்னை மாவட்ட நிர்வாக ஆலோசகர்
92442 12197



**V. புவனேஷ்வர்**
தென் சென்னை மாவட்ட நிர்வாகி
90425 64267



**L.சுகுமார்**
திரு.வி.க. நகர் தலைவர்
99411 86086



**T.M.ஞானசேகர்**
சோழிங்கநல்லூர் கிளைத் தலைவர்
98847 97407



**J. கோபாலகிருஷ்ணன்**
காஞ்சிபுரம் மாவட்ட இணைச் செயலாளர்
81247 56257



**M.மணீஷ்குமார்**
வடசென்னை மாவட்ட செய்தி நிருபர்
98413 99998



**A.செபாஸ்டியன்**
செ.மா. து.ஒருங்கிணைப்பாளர்
9444250049



**K.மணிகண்டன்**
செங்கல்பட்டு மாவட்ட இணைச் செயலாளர்
95001 42266



**L.G.சுபாஷ்சந்திரபோஸ்**
படப்பை கிளை நிர்வாகி
77089 89083

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT